தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, பங்குனி 6 (19-3-'60). சனிக்கிழமை | இதழ் 40

புரட்சி இளைஞர் மன்றம்!

அன்புள்ள தோழனே!

வணக்கம். இதழ் வழியாக முடங்கல் எழுதுவதில் எனக்குப் பயிற்சியில்லை என்பது தங்கட்குத் தெரியும். இந்தத் துறையை அழகாகவும் செம்மையாகவும் நம்முடைய தலைவர்கள் கையாண்டு வருகிறார்கள். இருப்பினும் நான் முடங்கல் ஒன்றை எழுதத் தொடங்கியதற்குக் காரணம் உண்டு. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல செய்திகளை ஒரே தலைப்பின்கீழ்க் குறிப்பதற்கு முடங்கல் முறைதான் பயன்படுகிறது. அதனால்தான் நானும் முடங்கல் எழுதத் துவங்கியுள்ளேன்.

அண்மையில் தமிழகத்து அரசியலில் இயங்கி வரும் ஆபாசப் போக்கினைத் தாங்கள் அறிவீர்கள். இந்த ஆபாசங்களுக்குத்தலைமைதாங்குவோர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைப் பற்றியே, தாறுமாறான பொய்யுரைகளைக் கூறிவருகின்றனர். இவர்கள்நமது பார்வையிலிருந்து அகற்றப்பட வேண்டியவர்கள் என்பது உண்மைதானென்றாலும், "பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால், மெய் போலும்மே! மெய்போலும்மே!" என்றபழமொழியை நாம் மறந்துவிட முடியாது! அரங்கின்றி வட்டாடுகின்ற அப்பாவிகளுக்குப் பதில் சொல்லவேண்டியது அவசியமில்லை என்றாலும், இவர் தம் பொய்யுரைகளைக் கேட்டு மயக்கமுறும் இரண்டொருவரைத் தெளிவுபடுத்த வேண்டியது நமது கடமையாகும்.

இன்று அரசியலை வயிற்றுப் பிழைப்பாக்கிக்கொண்டு விட்ட திராவிடர் கழகமும், நடிகர்களின் அடிதாங்கிக் கலையுலகில் முடிசூட விரும்பும் தமிழரசுக் கழகமும், காலித்தனத்தையே அரசியலாகநடத்தும் அளகேசனைத் தலைவராக்கிக் கொண்டுள்ள காங்கிரசும், ஊதியம் பெறும் அடியாட்கள் மட்டுமே நிறைந்துள்ள இளைஞர்(?) காங்கிரசும், தமக்குள் எவ்வளவு முரண்பட்ட கொள்கைகள் இருந்தபோதிலும், அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, கழகத் தலைவர்களைத் தாக்குவதற்காக ஒன்றுபட்டிருக்கின்றன. தாக்குதல் என்றால், மனித நாகரிகத்திற்கே புறம்பான வழியில் நடத்தப் பெறும் தாக்குதல். தலைவர்களின் நடத்தைபற்றி ஆபாசமான பொய்கள், இயக்கத்தின் தாய்மார்கள் மீது பொறுமையைச் சோதிக்கும் இழிதகைய தாக்குதல்கள், சிண்டு முடிந்துவிடும் சில்லரை வேலைகள் முதலியன நடைபெறுகின்றன. அது மட்டுமல்ல. அளகேசன் தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு வந்த பின்பு, செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மீது 30-க்குமேற்பட்ட பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நூற்றுக்குமேற்பட்ட தோழர்கள் கிராமப் பதவிகளிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலேயே மாத ஊதியம் கொடுத்து, அளகேசன் சில அடியாட்களை ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். தங்களுக்கென இருந்த சிறிய தத்துவங்களில் கூட நம்பிக்கை இழந்துவிட்டவர்களும், தத்துவங்களே இல்லாத காங்கிரசுக்காரர்களும் முழுக்க முழுக்க இந்தப் பணியில் இறங்கியுள்ளனர். அறிஞர் அண்ணா அவர்களையும் பிறரையும் பகிரங்க மேடைகளில் மந்திரிகளே தாக்குகின்றனர். காஞ்சிபுரத்தில் பேசிய ஒரு மந்திரி, "முட்டாள்கள்; அயோக்கியர்கள்; காமவெறியர்கள்!" என்று ஆபாச அகராதி முழுவதையும் ஒப்புவித்தார். தன்னைத் திராவிடர் கழகத்தான் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவன், சென்னை-மாதவரத்தில் பேசும்போது "அண்ணாத்துரையின் மார்பிலே என் கத்தி பாயும்!" என்று திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறான். சுருக்கெழுத்தாளரும் குறிப்பெடுத்திருக்கிறார். இக்கூட்டம் நடைபெற்று முப்பது நாட்களுக்குமேல் ஆகிறது. இன்னும் அவன் கைது செய்யப்படவுமில்லை; வழக்குத் தொடுக்கப்படவுமில்லை. தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியே நேரடியாகப் பணம் கொடுத்து நடத்தும் ஒரு பத்திரிகை சென்ற கிழமை இதழில் "கண்ணதாசனை வெட்டுங்கள்! கொல்லுங்கள்! கொன்று புதையுங்கள்!" என்று கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருக்கின்றது. இது தலைவர்களின் பார்வைக்கு இயக்கத் தோழர்கள் சிலரால் கொண்டு வரப்பட்டு இதன்மீது கிரிமினல் வழக்குத் தொடரும்படித் தலைவர்கள் எனக்கு ஆணையிட்டிருக்கின்றனர்.

கடந்த 9-3-'60 அன்று செங்கற்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் நான் பேசிக்கொண்டிருந்தபோது மண்டலக் காங்கிரசுக் கமிட்டித் தலைவர் என்று கூறப்படும் கணபதி என்ற பஸ் முதலாளி, பத்து அடியாட்களுடன் கூட்டத்துக்குள்ளே புகுந்தார். எல்லோருமே நன்றாகக் குடித்திருந்தார்கள். கூட்டத்திற்குள்ளேயே நின்று ஆபாசமாகத் திட்டினார்கள். 5000-க்கு மேற்பட்ட நமது தோழர்கள் ஒரு துளியும் கலவரத்துக்கு இடமின்றிக் கண்ணியம் காத்தனர். "குத்துவேன்! வெட்டுவேன்! கொல்லுவேன்!" என்று வந்திருந்த பத்துப் பேரும் கூறினார்கள். போலீசார் நின்றுகொண்டிருந்தும், அவர்களைக் கைது செய்யவில்லை. நான் கேள்விப்பட்டதிலிருந்து, காங்கிரசுக்காரர்கள், நம்மவர்களைத் தாக்கினால், அவர்களைக் கைது செய்யக் கூடாதென்று, போலீசாருக்கு இரகசியமாகச் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது என்பதாகக் கூறப்படுகிறது. இது உண்மையோ, பொய்யோ, நடக்கின்ற நிகழ்ச்சி அப்படித்தான் நடக்கிறது. இறுதியில் இந்தப் பத்துப் பேரையும் கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு, மேலும் ஒரு மணி நேரம் பேசினேன். "அளகேசனோடு ஒரே மேடையில் பேச வருகின்றாயா?" என்று சவால்விட்டார்கள். "வருகிறேன்! வருகிறேன்!" என்றேன்! மறுநாள் பதில் சொல்வதாகச் சொன்னார்கள். மறுநாள் செங்கல்பட்டு மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் சே. ஏ. வகாப் எம். சி. அவர்கள் கழுக்குன்றம் சென்று "எப்பொழுது வைத்துக்கொள்ளலாம்?" என்று கேட்டார்கள். "அதெல்லாம் தேவையில்லை. உங்களை ஒழிப்பதுதான் எங்கள் வேலை!" என்று சொல்லிவிட்டார்களாம், அந்தக் கண்ணியவான்கள். இது பற்றிச் செங்கற்பட்டுத் தோழர்கள் ஓர் அறிக்கை அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள். இப்போது மீண்டும் 28-3-60 அன்று பகைவர்களைப் பம்பரம்போல் ஆட்டி வைக்கும் தோழர் சி. பி. சி. அவர்களும், நானும் திருக்கழுக்குன்றத்திலே பேசுகிறோம். செங்கல்பட்டு மாவட்டமே அங்கு திரண்டு வரும். நிற்க,

இவற்றை நான் குறிப்பிட்டுக் கொண்டு வருவதற்குக் காரணம், எதிரிகள் எந்தெந்த வழிகளிலே இறங்கியுள்ளார்கள் என்பதைத் தாங்கள் தெரிந்துகொள்வதற்காகத்தான். "விபசாரிகள்! திருடர்கள்! அயோக்கியர்கள்!" என்றெல்லாம் நம்மைத்

கண்ணதாசன்

புறப்படுகிறது மானக்கவசம்!

இனி-'தமிழ்நாடு "காலிகள்" கமிட்டியா ?'

திட்டுவது எதிரிகளுக்கு மிகச் சாதாரணமானதாகிவிட்டது. குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பழி வாங்குவதென்று அளகேசன் முடிவு செய்திருக்கிறாராம். ஒரு கிழமைக்கு முன்னால் "ஊழியர் கூட்டம்" என்று ஒரு கூட்டத்தைக் . காஞ்சிபுரத்தில் அவர்கள் கூட்டினார்கள்; அதிலே என்னென்ன பேசினார்களென்பதைக் கேள்விப்பட்டால் நீங்கள் திடுக்கிடுவீர்கள்! மந்திரிகள் முன்னிலையிலேயே அந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

அன்று மாலையில் காஞ்சிபுரத்திலேயே பொதுக்கூட்டம் போட்டு, அளகேசனும் நான்கு மந்திரிகளும் பேசினார்கள்; அதே நேரத்தில் காஞ்சியின் வேறொரு பகுதியில் அறிஞர் அண்ணா அவர்களும் மா. கி. தசரதன் அவர்களும் பேசினார்கள். கூட்டம் எங்கே இருந்திருக்கும் என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இருப்பினும் மந்திரிகளின் பேச்சு - பேச்சா அது ?-"அண்ணாத்துரையை எப்படியும் முறியடிக்க வேண்டும்! தி. மு க.க்களை நாட்டிலிருந்தே ஓட்ட வேண்டும்!" என்று முடிந்ததாம். அளகேசன் வழக்கம் போல் சவால் விட்டாராம். "எந்த வழியில் வேண்டுமானாலும் இறங்குங்கள்!" என்று இளைஞர் காங்கிரசுக்கு-மன்னிக்க வேண்டும்-அடியாட்களுக்கு ஆணையிட்டாராம். தோழரே! இதிலே அதிசயம் என்ன தெரியுமா? சனநாயகச் சிகாமணிகளான மந்திரிகள் இதைப் புன்னகையோடு கேட்டுக்கொண்டிருந்தார்களாம்.

தோழரே! தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி, அடியாட்களுக்கு மட்டுமல்ல; திராவிடர் கழகத்திற்கும் சிவஞான கிராமணிக்கும்கூடப் பணம் கொடுக்கிறது என்று காங்கிரசுக்காரர்களே சொல்கிறார்கள்.

நாம் ஆத்திரமூட்டப்படுகிறோம். அண்ணா அவர்கள் ஆணைப்படி அமைதியாக விருக்கிறோம். ஆனால் இந்த அமைதியை, நம்முடைய கையாலாகாத்தனம் என்று எதிரிகள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மௌனம் அவர்களுடைய பொய்யுரைகளை நாம் ஒப்புக்கொண்டதாகக் கருத வைக்கின்றது. "இதற்கொரு முடிவில்லையா ?" என்றேங்கும் பல்லாயிரக் கணக்கான கழகத்தோழர்களை நான் தினமும் சந்திக்கிறேன். கடந்த சனவரி முதல் தேதியிலிருந்து இன்றுவரையிலே தமிழகத்தின் பல பகுதிகளிலுமாக 68 கூட்டங்கள் பேசினேன். "ஒவ்வொரு நாளும் கூட்டம் போட்டு எதிர்க்கட்சிக்காரர்கள் நம் தலைவர்களை மானக்கேடாகப் பேசுகிறார்களே! இதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று பலரும் என்னிடம் கேட்டார்கள். நான் என்ன சொல்லமுடியும்? கடந்த பிப்ரவரி முடியக் கணக்கிட்டதில், தமிழகத்தில் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 3673 கிளைக் கழகங்கள் இருக்கின்றன. ஏறக்குறைய இரண்டு இலட்சத்து எழுபதினாயிரம் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். மலாயா, பர்மா, இலங்கைப் பகுதிகளில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவ்வளவு பெரிய விடுதலை இயக்கத்தை, இந்த மூக்குப்போன நொண்டிகள், முடங்கள் எதுவும் செய்யமுடியாது என்பதைக் குருடனும் அறிவான்.

எனினும், ஆபாசப் பொய்யுரைகளை உடைத்து, நீதியை நிலைநாட்டுவதற்காக ஒரு துணைமன்றம் துவக்கப்பட வேண்டும் என்பது பெரும்பாலோரின் எண்ணம். நாட்டிலிருக்கும் பல்லாயிரக்கணக்கான படிப்பகங்களையும் மன்றங்களையும்போல, இதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணையமைப்பாக இருக்கவேண்டும். கழகத்தின் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு முதலிய இவையே இந்த மன்றத்தின் தாரக மந்திரமாயிருக்க வேண்டும். ஆனால் பொய்யுரை கூறும் எதிரிகளை, அதை நிரூபிக்கும்படி இம் மன்றம் வற்புறுத்தவேண்டும். இப்படிப் பல தோழர்கள் என்னிடம் கருத்துத் தெரிவித்ததால், நானும் செங்கல்பட்டு நண்பர்களையும் சென்னைத் தோழர்களையும் கலந்து பேசினேன். இன்று (19-ம் தேதியன்று) சென்னையில் ஓர் அமைப்புக் கூட்டம் நடைபெறுகின்றது. இக் கூட்டத்தின் விவரங்களை நீங்கள் அடுத்த "தென்ற"லில் காணலாம். என்னைப் பொறுத்த வரையில் சென்னை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் இரண்டிலும் முழுக்க முழுக்க அடிப்படைத் தொண்டுகளில் ஈடுபட விழைகிறேன். இதற்கென்று பதினைந்துபேர் வரை செல்லக்கூடிய பிரசார வண்டி ஒன்றினையும் ஏற்பாடுசெய்திருக்கிறேன். அளகேசனால் பழிவாங்கப்பட்டவர்கள், வழக்குத் தொடரப்பட்டவர்கள், சோர்வுறாமல் கழகப்பணியில் ஈடுபடுவதற்கு என்னாலான உதவிகளைச் செய்ய முடிவு கட்டியிருக்கிறேன். இந்த இரண்டு மாவட்டங்களிலும் அரசாங்கத்தால் கழகத் தோழர்கள்மீது தொடுக்கப்படும் வழக்குகளைச் செலவு செய்து நடத்துவதற்கு என் நண்பர்களின் உதவியைக் கோரியிருக்கிறேன்.

முழுக்க முழுக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைப் போலவே துளிகூடப் பலாத்காரத்துக்கு இடமின்றி, இப் முயற்சி நடைபெறும்!

என்னைக் கொல்லுவேன் என்று அவர்கள் பத்திரிகையிலேயே எழுதிவிட்டதால், ஆட்சியிலிருப்போர்கள் ஆனந்தத்தோடு அதையும் பார்த்துக் கொண்டிருப்பதால், நானும் சாவுக்கே தயாராகிவிட்டேன். அப்படிச் செத்தால் அந்தச் சாவு நான் விரும்பி ஏற்றதாகவே இருக்கும். எப்படியும் ஓராண்டுக் காலத்திற்குள் ஆபாச - பலாத்கார இயக்கங்களுக்குச் சென்னை - செங்கற்பட்டு மாவட்டங்களில் ஒரு முடிவு காண நான் விரும்புகிறேன். வெறும் பொதுக்கூட்டங்களைவிட, இப்பொழுதிருந்தே கிராமங்களுக்குள் புகுந்து தொண்டு செய்வதே பயன்தரும். அளகேசனின் அடியாட்கள் நடத்தும் பலாத்காரங்களை மிக மிக அமைதியாகச் சமாளித்துச் சென்னை - செங்கல்பட்டு மாவட்டங்களில் கழகத்தை ஒன்றுக்குப் பத்தாக வளர்க்கும் பொறுப்பை நான்ஏற்றுக்கொள்கிறேன். என்மீது அன்பு வைத்துப் பிற மாவட்டத் தோழர்கள் குறைந்தது ஆறு மாதத்திற்காவது என்னை வெளி மாவட்டங்களில் கூட்டத்திற்கு அழைக்க வேண்டாம். திட்டவட்டமாக, சென்னை-செங்கல்பட்டு ஆகிய இரண்டு மாவட்டங்களின் நடைமுறை வேலைகளைத் தலைமைக் கழகத்தின் கட்டளைக்குக்கீழ்ப் படிந்து, கவனிக்கும் பொறுப்பினை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்,

"யாரைக் கேட்டுக்கொண்டு இவற்றை ஏற்றுக்கொள்கிறாய் ?" என்று கேட்காதீர்கள். நடைமுறை வேலைக்கு இரண்டு மாவட்டங்களை ஒதுக்கிக் கொண்டு ஒருவன் பணிபுரிவதை இயக்கத் தலைவர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்.

நான் மேலே கூறியிருப்பதைப் போல், துவக்கப்படவிருக்கும் மன்றம் முழுக்க முழுக்க, கழகத்தின் துணையமைப்பாக, கண்ணியம்-கடமை-கட்டுப்பாடு தவறாததாகவே இருக்கும்.

ஆனால் கழகத்தலைவர்களின் மானம் மரியாதைகளை, கழகத் தத்துவங்களின் புனிதத் தன்மையைக் கட்டிக்காப்பதற்காக, உயிரையும் தியாகம் செய்யக் கூடிய இளைஞர்களைக் கொண்டதாக இருக்கும். இம்மன்றத்திற்கு, நமது அருமைத்தலைவர்களின் வாழ்த்துக்களும் கிடைக்கவேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்களே! தழைத்துவரும் கழகத்தை அழிக்க வரும் எதிரிகளிடமிருந்து காப்பதற்காக, உயிரையும்விடத் துணிந்திருக்கும் எங்களுக்கு அனுமதி கொடுங்கள்! வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் அனுபவித்துவிட்டதால், மிகக் குறைந்த வயதிலேயே சாவதற்குத் தயாராயிருக்கிறேன்! கோரமான சாவுகள்தான், நிலை பெற்ற புகழை எவருக்கும் வழங்குகின்றன என்றால்; அந்த வரிசையில் எதிரிகள் என் பெயரையும் சேர்ப்பதை நான் பெருமையோடு வரவேற்கிறேன்! பாடி முடிக்கும்முன்னே ஒருவன் ஆடி முடித்துவிட்டான் என்றிருக்கட்டும்! தினந் தினமும் எதிரிகள் நடத்திவரும் நிகழ்ச்சிகளைக் கண்டு என் இரத்தம் கொதிக்கிறது! ஈட்டி முனை காட்டி நிற்கும் எதிரிகளின் முன்னால், தலை நிமிர்ந்து செல்வதற்கு என்னை அனுமதியுங்கள்!

தோழரே! உங்களுக்கு எழுதும் கடிதத்திலேயே அண்ணா அவர்களையும் நான் வேண்டி நிற்பதை மன்னியுங்கள். நான் செய்கின்ற பணி கழகத்தின் ஆணி வேரை, அடிப்படையைப் பெருமளவில் பலப்படுத்துமென்று முழு மனதோடு நம்புகிறேன். இந்தப் பணியை முன்னிட்டு, வெளி மாவட்டங்களுக்கு நான் தந்திருக்கும் தேதிகளை ஓரளவுக்கு நான் மாற்றியமைக்க வேண்டியவனாயிருப்பேன். வெளி மாவட்டங்களில் தேதி வாங்கியிருக்கும் நண்பர்கள் தயவு செய்து பொறுத்தருள வேண்டுகிறேன். பிற விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

அன்புள்ள,

கண்ணதாசன்.

"தென்றல்"

நெடுங்கதைப் பரிசுப் போட்டி.

இளையஎழுத்தாளர்களைஊக்குவிக்கவும், புதியனவான அணிகள் பல தமிழ் மகளுக்குச் சூடவும் "தென்றல்" எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை நண்பர்கள் அறிவர். "தென்றல்" 1955-ல் நடத்திய நெடுங்கதை, காவிய, நாடகப் போட்டிகளை வரவேற்ற தமிழகம் இப்போது நடத்தப்பெறும் நெடுங்கதைப் போட்டியையும் வரவேற்கும் என்றறிவோம். "தென்றல்" நண்பர்கள் அனைவரும் இப் போட்டியில் பங்குகொள்ள அழைக்கிறோம். வருக! வருக!

விதிகள் :

1. தோழர்கள் அனுப்பும்கதைகள்தமது சொந்தக்கற்பனையால், தமிழகச் சூழலுக்கேற்ப எழுதப்பட்ட நெடுங்கதைகளாக இருக்கவேண்டும்.
2. இந்நெடுங்கதைகள் வெள்ளைத்தாள் அளவில் 200 முதல் 250 பக்கங்கள் வரை அமையலாம். 250பக்கத்திற்கு மேல் போகக்கூடாது. பக்கத்திற்கு முப்பதுவரிகள் அமைதல் நலம்.
3. முடிவுதேதி **30- 6- 60** ஆகும்.
4. போட்டியின் முடிவுகள் 16-7-60 **அன்று "தென்ற"லில்** அறிவிக்கப்படும்.
5. மொத்தப் பரிசுத்தொகை ரூ. 500-ல், முதல்பரிசுபெற்றவர்க்கு ரூ250-ம், இரண்டாமபரிசு பெற்றவர்க்கு ரூ150-ம் மூன்றாம் பரிசு பெற்றவர்க்கு ரூ100-ம் வழங்கப் பெறும்.
6. போட்டி நடுவணர்கள் பெயர் 2-7-60 **அன்று "தென்ற"லில்** அறிவிக்கப்பெறும்.
7. தேர்ந்தெடுக்கப்பெறும் நெடுங்கதைகளை, "தென்ற"லில் வெளியிடும் உரிமையும், பின் நூல் வடிவில் வெளியிடும் உரிமையும், "தென்றல்" அலுவலகத்தார்க்கே உரியன.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 19-3-'60 | இதழ் 40

தென்னிலங்கையில் தேர்தல் நடக்குதாம்!

வைத்தழுத ஒப்பாரி முடிவதற்குள் வெடித்தெழுந்த தேர்தலின் பெரு முழக்கங்கள் தென்னிலங்கைத் தெருக்களிலெல்லாம் ஒலிக்கின்றன!

மொத்தத்தில்...

இரண்டு கொடுமைகள் தமிழினத்தையும் சிங்களவர் கூட்டத்தையும் வேதனைக்குள்ளாக்கிவிட்டன. ஆட்சிச் சிதைவும் இனவெறியும் இலங்கையைச் சுடுகாடாக்கியிருக்கின்றன.

25, 332 சதுரக் கற்கள் பரப்புள்ள இந்நிலத்தில் 80 லட்சத்து 98 ஆயிரத்து 637 மக்களும் குறிப்பிடத்தக்க 19 கட்சிகளும் உள்ளன. மொத்தம் 146 இடங்களுக்கு 990 க்கு மேற்பட்டோர் கடும் போட்டியிடுகின்றனர். 19 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் சுயேச்சையாளர்களும் சேர்ந்தே இத்தொகை. இந்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும் நாளில் தான் இலங்கையில் அமைதி தவழும் என்பது உறுதி.

எவர் எந்த வழி போனாலும்...

இலங்கைத் தமிழர் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கும் நற்செயல்கள் எவரெவர் மேற்கொள்கின்றனரோ அவர்களுக்குத்தான் தமிழர்களின் ஆதரவு உண்டு. சிங்களவர் இயக்கங்கள் பல, ஆசைமொழிகள் சிந்துகின்றன. இக்குரல் வாக்குச் சேகரிப்பிற்காக வந்த சாகச மொழிகளாகவே இருந்தாலும் கவலைப் படுவதற்கில்லை. தமிழ்த்தொழிலாளர்கள் தம் வாக்குகளை ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

சிங்களம் மட்டும்...

என்ற 1956-ம் ஆண்டுச் சட்டம்பற்றிச் சிங்களத் தலைவர்கள் நாச்சலம்பம் ஆடுகின்றனர். அரசின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழுக்கும் இடம் தரும் நல்லெண்ணம் சிங்களத் தலைவர்களிடம் துளியும் இல்லை. தமிழருக்காகத் திறந்த இதயத்துடன் பேசுவோர்க்கே தமிழர் வாக்குகள் வாக்குகள்.

வெருட்டப்படும் தமிழர்கள்......

ஒன்பது இலட்சத்திற்குமேல் இருக்கின்றனர். இலங்கையின் வளங்கள் அத்துணைக்கும் ஊற்றனவை, இத்தமிழர்களின் கண்ணீர்க் குளங்களே! இதை நாடறியும்; நாமறிவோம். என்றாலும் தாமுணராத் தன்மையராய் இலங்கை அரசினர் செல்வது ஏனோ?

ஈழநாட்டு...

ஆட்சியின் தலைமைப் பீடத்தில் இதுவரை அமர்ந்திருந்த தலைவர்களான ஸ்டீபன் சேனநாயகா, டட்லி சேனநாயகா, கொத்தலவாலை, பண்டாரநாயக்கா, இப்போதிருக்கும் தகநாயக்கா முதலிய அனைவரும் கொயிகம சிங்களவர் என்ற மேல் சாதியினரே. பண்டாரநாயக்கேயின் கட்சிக்கு இப்போது தலைவராக வந்திருக்கும் தோழர் சி. பி. டி. சில்வா தாழ்ந்த சாதி எனக் கருதப்படும் கரவா சிங்களவர் என்ற சாதியைச் சார்ந்தவர். அவர் இத்தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்தால், இலங்கையின் வரலாறே மாறிவிடும். மேல் சாதியினரான கொயிகம சிங்களவரிடமே இருந்து வந்த ஆட்சி கீழ் சாதியினர் கைக்கும் வரக்கூடும்; அவர்களுக்கும் பெருமை கிடைக்கும். ஆனால் சிங்களவர் சாதிப் போராட்டங்களுக்குத்தான் இந்த சாதிப் பிரச்னை சாதகமாகுமே ஒழிய தமிழர்கட்கு எவ்வகையான நலனும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆக......

19-3-60 அன்று தேர்தல் களத்தின் இறுதிநாளைச் சந்திக்கும் இலங்கைத் தமிழர்கள் சிக்கல் நிறைந்த வினுக்குறி ஒன்றை எதிர்நோக்கி நிற்கிறார்கள். தமிழுக்கு இடமளிப்பார், தம் வாழ்வுக்கு உறுதியளிப்பார் எவரெவரோ, அவரவர்க்கே தமிழரின் வாக்குகள் துணை போகின்றன!

தமிழர்கள்......

தாயகத்திலிருந்தும் உதவி எதிர்பார்ப்பதற்கில்லை, நேரு ஆட்சிஇருக்கும் மட்டும்.

சிங்களவர்கள்...

குழப்பமும் ஓலமும் ஒழிந்து அமைதியும் ஒழுங்கும் காண, இத்தேர்தல் நாளே ஒரு வல்ல நாள்!

இருவரும் கூடி...

ஒரு முடிவினை எடுத்தல், அழிவினைத் தடுத்தல், தமிழினைக் காத்தல் ஆய இத்தனையும் உடனடிக் கடன்கள். இவை நிறைவேறினால் கட்டாயம் இலங்கை அரசியல் சபை பொலிவுறும்; செழிப்புறும்! ★

அழைத்தனர் இப்படி!

அவசரம்

நெ. 23/2/50-F.C.

இந்திய அரசாங்கம்

செய்திகள் ஒலி பரப்புத் துறை அமைச்சரவை
புது டில்லி 2. செப். 26, 1959.
4. அஸ்வினி (1881)

To
M/s. கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ்
142, முதல் மெயின் ரோடு
ஸி. ஐ. டி. காலனி
சென்னை-4.

பொருள்: கெய்ரோவில் இந்தியப் பட விழா.

அன்புடையீர்!

கெய்ரோவில், வருகிற அக். மாதத்தில் (1959) இந்தியப் பட விழாவொன்றை ஐக்கிய அரபுக் குடியரசு அரசாங்கத்தினரோடு ஒன்று சேர்ந்து நடத்துவதென்று அங்குள்ள நமது இந்தியத் தூதரகம் தீர்மானித்திருக்கிறது.

அங்கு அந்த விழா தொடர்ந்து ஒரு வாரம் நடப்பதோடு அப்பொழுது தினமும் ஒரு சிறந்த படமும் சில டாக்குமெண்டரிப் படங்களும் திரையிட்டுக் காண்பிக்கப்படும்.

இப்படக் காட்சி சார்பந்தப்பட்ட எல்லா ஏற்பாடுகளும் ஐக்கிய அரபுக் குடியரசின் அரசாங்கத்தினரால் செய்து தரப்படும் விமானப்போக்குவரத்துச் செலவுகள் வெளி விவகார அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

'சிவகெங்கைச் சீமை' என்ற தலைப்புடைய உங்கள் படம் இந்த விழாவில் கலந்துகொள்வதற்காகச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. எனவே தாங்கள், தொழில் நுணுக்க அதிகாரி, படப் பிரிவு இலாகா ஆடிட்டோரியம், புதுடில்லி என்ற முகவரிக்கு, படத்தின் நல்ல பதிப்பொன்றை அமைச்சர் குழு முன்னதாகப் பார்ப்பதற்காக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தால் நாங்கள் நன்றியுடையவர்களாய் இருப்போம்.

இந்தப் பட விழா இந்திய பிலிம் பெடரேஷனின் கூட்டுறவோடு நடத்தப்படுகிறது. மேலும் அவர்களே படப் பதிப்புக்களையும் மற்றைய விளம்பர சாதனங்களையும் தயாரித்துக்கொள்வார்கள்.

உங்களுடைய விரைவான பதிலுக்கு நன்றியுடையவர்களாய், இருப்போம்.

தங்களின் நம்பிக்கையுள்ள,
வி. பி. பண்டிட்,
இந்திய அரசாங்கத்தின் துணைச் செயலாளர்.

எண். 23/2/59-FC (FI)

இந்திய அரசாங்கம்

செய்திகள், ஒலி பரப்பு துறை அமைச்சரவை
புது டில்லி 2. அக் 25, 1959.

From
திரு. ஆர். கன்னு
இந்திய அரசாங்கத்தினரின் துணைச் செயலாளர்.

To.
M/s. கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ்
142, முதல் மெயின் ரோடு
ஸி. ஐ. டி. காலனி
சென்னை-4.

பொருள்: கெய்ரோவில் இந்தியப் பட விழா.

அன்புடையீர்,

மேற்கண்ட பொருளைக் குறித்து செப்டம்பர் 30-ம் தேதி (19-9) தாங்கள் கடிதத்தில் எழுதியுள்ள கண்டவற்றிற்கிணங்க உங்களுக்குச் சிலவற்றைச் சொல்ல வேண்டிவனுயிருக்கிறேன. அதாவது தங்களின் படமான 'சிவகெங்கைச் சீமை' (தமிழ்)பற்றிய கீழ்க்கண்ட விவரங்களை விமானம் மூலமாக, 'திரு. பாண்டே, பொதுநல உறவு அலுவலர், இந்தியத் தூதராலயம், 37, ஷாரியா சாலிமன்பாஷா, தபால் பெட்டி எண். 718. கெய்ரோ (எகிப்து) என்ற முகவரிக்கு அன்புடன் அனுப்பி வையுங்கள்:

1. படத்தின் பெயர்.
2. நீளமும், அளவும்.
3. தயாரிப்பாளர், டைரக்டர், பிரதம நடிகர்கள் முதலானோரின் பெயர்கள்.
4. படத்திற்குக் கிடைத்த பரிசுகள் அல்லது பாராட்டுப் பத்திரங்கள்.
5. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கதைச் சுருக்கத்தின் இரண்டு பிரதிகள்.
6. வேறு ஏதாவது விளம்பர சாதனங்கள் (போஸ்டர்கள், ஸ்லைடுகள் நீங்கலாக)

2. தங்களுடைய கடிதத்தின் பிரதிகளும், அனுப்பப்பட்ட மற்ற சாதனங்களைப்பற்றிய செய்திகளையும் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு ஏககாலத்தில் அனுப்பி வையுங்கள்.

(i) கீழே கையெழுத்திட்டுள்ளவர்.
(ii) வெளி விவகார அமைச்சரவை வெளிநாட்டு விளம்பரப் பிரிவு, ஹைதராபாத் நிலயம், புதுடில்லி.

தங்களின் நம்பிக்கையுள்ள,
டி. ஆர். கன்னு,
இந்திய அரசாங்கத்தினரின் துணைச் செயலாளர்.

மாறினர் பின்னர்!

சாற்றுவீர் — சரியா? தப்பா?

ஏடுகளே!

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் காருண்ய மூர்த்திகள்!

ஊரார் வீட்டு நெய்யை எடுத்து வாரி இறைக்கும் உத்தம புத்திரர்கள்!

பொதுப்பணத்தை எடுத்துத்தனியார் வீட்டுக்கு அனுப்பும் அருளாளர்கள்!

ஏழையரின் வியர்வைத் துளிகளைச் சீமான்களின் தோட்டத்திற்குப் பாய்ச்சும் ஏகபாரதத் தொண்டர்கள்!

உங்களைக் கூவிக் கூவி அழைக்கிருர்கள்!

பத்திரிகை முதலாளிகளே! உங்கள் பாதங்களில் விழுந்து கெஞ்சவும் தயார்! தயார்!

மாற்றுக் கட்சியாரை நோக்கி தரக்குறைவான சொற்களைத் தூவும் உங்கள் காலடியில் ஊரார் பணத்தைத் தூவத் துடிக்கின்றனர், காங்கிரசார்!

எழுது கோலேந்திகளே! ஏன் இன்னும் அச்சம்? செங்கோலேந்திகள் உங்களைப் பொன்னால் குளிப்பாட்டி, முத்து மணிகளால் மூழ்கடிக்கத் தயாராய் இருக்கின்றனர். ஓடிவாரும்! ஓடிவாரும்!

ஓடிவர மாட்டீர்களா? உட்கார்ந்த இடத்திலேயே இருப்பீர்களா?

காங்கிரசுக்குக் குரல் கொடுங்கள்! அவர்கள் பணம் கொடுப்பார்கள்!

எல். ஐ. சி. உங்கள் காலடியில் விழும்!

கழகத்தின் வழி நடந்த ஊழல்கள், ஓரவஞ்சச் செயல்கள் ஒன்றன்பின் ஒன்ருய் வெடித்திருக்கின்றன. யார் யார் கூடினலும் தீமையை எத்தனை நாளைக்கு மறைக்க முடியும். ஊழலை மறைக்க முனைந்த நேருவின் முகம், ஒவ்வொரு கணமும் குத்தப்படுகிறது; அவரது முகமூடியின் ஒவ்வொரு அணுவும் கிழிக்கப்படுகிறது!

நடந்து வரும் பாராளும் மன்றத்தில் ஒவ்வொன்ருய் வினக்கள் கிளம்புகின்றன! "அவன் குற்றவாளி! இவன் குற்றவாளி" என்று தட்டிக் கழித்துத் தப்பித்துக்கொண்ட நேரு இப்போது செய்வதறியாது திகைக்கிருர்.

ஏழை மக்கள் தம் பிற்கால நல்வாழ்வுக்கென பல நம்பிக்கைக் கோட்டைகளைக் கட்டுகின்றனர். அன்ருடம் தாம் கொட்டிய குருதித் துளிகளுக்கு ஈடாகப் பெறும் சிறிய தொகையில் ஒரு பகுதியை எதிர்கால நலனுக்காக உயிர்முறிக்கழகத்தில் (எல். ஐ. சி.) போட்டு வைத்திருக்கின்றனர். ஆனல் அந்தத் தொகை எல்லாம் அவர்களின் நம்பிக்கை பாழாகும் வண்ணம் வீணக்கப்பட்டு வருகிறது.

முந்திரா என்ற முதலைமனிதனுக்கு அவர்கள் காணிக்கை செலுத்தியதும் அதனல் ஏழையர் குருதி பாழானதும் ஆன அந்தக் கதை, நாடறிந்ததே! அது காங்கிரசுக்கு நிதி தந்த முதலாளிக்கு, உயிர் முறிக்கழகம் பணம் தந்த கதை!

இலட்சமும், சென்னை கீழ்ப்பாக்கத்திலிருந்து வரும் "கல்கி"க்கு ஓர் இலட்சத்து இருபதினயிரம் ரூபாயும் கடன்கள் தந்திருக்கிறது உயிர்முறிக் கழகம்! "யாரைக் கேட்டுத்தந்தது, இந்தப் பணத்தை?" என்பதோடு, "யார் யார் யாருக்குத் தந்தது?" என்பதையும் நோக்குங்கள். தரப்பட்ட அத்தனை கடன்களும், காங்கிரசுக்குக்குரல் கொடுப்பவை! 'கல்கியும் அப்படியா?' என்பீர்! ஆமாம்! இக்கடனை அது பெற்ற 1957-ம் ஆண்டு மேத்திங்களில் அது காங்கிரசுக்குத்தான் குரல் கொடுத்து வந்தது! "நாட்டிலே பல ஏடுகள் இருக்க, ஆளவந்தார் ஏன் இக்காங்கிரசாதரவு ஏடுகளுக்குமட்டும் உதவினர்?" என்பது ஒரு கேள்வி! அது மட்டுமில்லை. "பொதுமக்கள் பல இயக்கங்களைச் சார்ந்திருக்கின்றனர்; சாராமலும் இருக்கின்றனர். அப்படிப் பல தரப்பானவர்களின் பணத்தை உயிர் முறிக்கழகம் காங்கிரசை ஆதரிப்போர்க்கு மட்டும் தந்தது ஏன்? ஏன்?" என்ற வினவும் பாராளுமன்றத்திலே வெடித்திருக்கிறது. மகாவீர் தியாகி, தாந்தியா கே. டி. கே. தங்கமணி, பட்டேல் முதலியோர் வினக்கணைகளைத் தொடுத்திருக்கின்றனர். விழித்திருக்கின்றனர் அமைச்சரும் தலைமையமைச்சரும்! யாருக்குயார், யார் பணத்தை அள்ளித் தருவது? எவருக்குஎவர், எவருடையசொத்தை வாரியிறைப்பது?

நடக்கட்டும்; எத்தனை நாளைக்கு இந்தச் செயல்?

நம்மைப்போன்று பொதுச்சொத்தின் தூய்மையில்நம்பிக்கைகொண்ட ஒரு காங்கிரசுக்காரரும் இருக்கின்ருர்! ஆமாம்! சூதாடிகள் கூட்டத்தில் ஒருகாந்தியாரும் இருக்கின்ருர்!

அவர் இராமநாதபுரத்திலேயிருந்து பாரளுமன்ற உறுப்பினராக. தில்லிக்குச் சென்ற காங்கிரசுக்காரர். அவர் உயிர் முறிக் கழகத்தின் சொத்துக்கள் தவருன வழியில் செலவிடப்படுவதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிருர். அவர் அந்த ஊழல்களைக் களைவதற்காகப் பலநாள் போராடியிருக்கிருர், அதற்குப் பொறுப்பானவர்களிடம். பலன் இல்லாதுபோனபின் தான், அவர் எல். ஐ. சி.யில் தனக்குள்ள தொடர்புகளை அறுத்துக் கொண்டதோடு, பொதுமக்களுக்கும் அந்தச் செய்திகளைத் தெளிவாக்கியிருக்கிருர், தான் "இந்து" ஏட்டிற்கு எழுதிய கடிதம் ஒன்றின் மூலமாய். தோழர்கள் ஊழலுக்கும் நேர்மைக்கும் நடந்த போராட்டத்தை அப்படியே உணர்வதற்காக அவர்எழுதிய மடலை அப்படியே தருகிரேம்:

"ஐயா,

எல். ஐ. சியின் முதலீட்டுக் கொள்கைபற்றி நிதி யமைச்சர் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சைத்தந்த பத்திரிகைச் செய்தியைப் படித்தேன். எனது பெயர் அந்த

கல்கிக்கும் சர்க்காருக்கும் கல்யாணமாம்! எல். ஐ. சி. கடன் பணத்தில் கச்சேரியாம்!

இதோ நாங்கள் ஓடிவருகிரேம்! எங்கள் நேருவும் ஓடிவருகிருர்! அப்படியே இருங்கள்; உங்களைப் பொன் வெள்ளத்தில் மூழ்கடிக்கிரேம்!

★

இப்படி அழைப்பு விடுப்பவர் யாரென்று சொல்லவும் வேண்டுமோ? இந்தியச் செய்திப் படங்களிலும், நாளிதழ்களிலும், கிழமை ஏடுகளிலும், திங்கள் வெளியீடுகளிலும் கதாநாயகப் பாத்திரம் தாங்குகிருரே, அவரா? இல்லை! பிச்சைப் பாத்திரம் தாங்கும் இந்தியாவின் கதாநாயகப் பாத்திரம் தாங்கும் நேருவின் அடியார்களா? யார்? யார்? யாரோ ஒருவர் அல்லது சிலர் திரை மறைவில் அழைக்கின்றனர்; தீயசக்திகள் திரள்கின்றன! அவற்றின் பைகளை நேருவின் அரசாங்கம் நிரப்புகிறது; அவற்றின் கைகள் நேருவின் புகழ்பாடி எழுத்துக்களை நிரப்புகின்றன. இத்தனை தீமைகளையும் சதிவேலைகளையும் மோசடிகளையும் வெகு பல நாட்களாக மூடி மறைத்திருக்கிறது, இந்திய அரசாங்கம். துடித்துக் கேட்டவர்களையும் வாயை அடைத்துவைக்க முனைந்திருக்கிறது, நேருவின் கொற்றம்! பந்துக்குள் காற்றை அடைத்து வைக்கலாம் ஓரளவு வரை! அணைக்குள் நீரைத் தேக்கலாம் ஓரளவு வரை! அளவு கடந்தால்...பந்து வெடிக்கும்! அணை உடையும்! ஆமாம்! இப்போது உயிர்முறிக்

இப்போது வெளியாகியிருக்கும் கதை, காங்கிரசுக்குப் பிரசாரம் தந்த ஏடுகளுக்கு உயிர்முறிக்கழகம் கடன் உதவி தந்த கதை! "ஒருவருக்கொருவர் உதவிக் கொள்கின்றனர். இதிலென்ன தவறு?" என்றிருந்திட முடியாது! உதவியின் தரமும் வகையும் ஆராயப் படவேண்டியன. நாட்டில்எத்தனையோ ஏடுகளிலிருந்தும் குறிப்பிட்ட சில ஏடுகளுக்கே அந்த உதவிகள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஒன்று மட்டும், ஆளவந்தார்க்குப் புகழ் பாடிய ஏடு!

சென்னையில்வெளியாகும் "இந்து" ஏட்டிற்கு உயிர் முறிக் கழகத்தினர் தந்திருக்கும் கடன் இரண்டு இலட்சங்கள்! அத்தோடு அக்கழகத்தினர் அதில் இட்டிருக்கும் மூலதனம் வேறு ஓரிலட்சம் ரூபாய்!

இப்படியே சலந்தரிலிருந்து வரும் "டெய்லி ஹிந்து சமாச்சார்" எனும் ஏட்டில் 40000 ரூக்குப் பங்குகளும், அகமதாபாத் ஏடான "சந்தோசில்" 44000ரூ பங்குகளும் வாங்கியிருக்கிறது, இக்கழகம்!

"ஆனந்த பசார்" ஏட்டிற்கு ரூ25 இலட்சமும், "அமிர்த பசார்" ஏட்டினர்க்கு ரூ14 இலட்சமும், குசராத்தி ஏடுகளை நடாத்தும் நியூ இந்தியாக் கம்பெனிக்கு ரூ ஏழு இலட்சமும்' "பிரீ பிரசு சர்னல்" ஏட்டிற்கு ரூ$4\frac{1}{2}$

" இந்துஏட்டின் பங்குகள்பொதுச் சந்தையில் விற்பனைக்குத் தயாராய் இல்லாதபோதும், துடித்துக்கொண்டு தாமே போய் உயிர் முறிக் கழகத்தினர் பங்குகளை வாங்கியதேன்? என்ருராம் ஓர்உறுப்பினர். அமைச்சர் பதிலளித்தாராம், "அவ்வேட்டில் மூலதனமிடுவதில் இலாபம் இருக்கிறது! அதனல்தான் மூலதனமிட்டோம்!" என. என்ன இலாபம்? பொதுமக்களுக்கு உண்டா அந்த இலாபம்? இல்லவே இல்லை! காங்கிரசார்க்கே அந்த இலாபம் பரந்த அளவில் இருக்கிறது! நன்றியுடன் நாள்தோறும், நேருவின் புகழ்பாடும் அல்லவா, அவ்வேடு! அதனல்தான் "இலாபம் இருக்கிறது!" என்ருர் போலும் அமைச்சர்.

மற்ருென்றும் வெளியாகியிருக்கிறது. ஏற்கனவே 'ஸ்டேட் பாங்க்' ஓர் ஏட்டிற்குப் பெருந்தொகை ஒன்றைக் கடனகக் கொடுத்தது!" என்ற உண்மையும் வெளியாகியிருக்கிறது, இந்த விவாதத்தில். ஈராண்டுகளுக்கு முன் "பிளிட்சு" என்ற ஏடு ஒருசெய்தி வெளியிட்டிருந்தது. வடக்கத்தியக் கோயங்காவின் "இந்தியன் எக்சுபிரசு" ஏட்டிற்கு ரூ. 55 இலட்சம் கடன் தந்ததாக! அந்த ஏடு தந்த செய்திகளை மறுக்கவில்லை அரசினர். அவர் அதையேதான் இப்போதும் குறிப்பிட்டிருக்கிருர் என்றெண்ணுகிறேன்! நடக்கட்டும்!

விவாதத்தில் சரளமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால், அவர் நெஞ்சில் கிளம்பியிருக்கும் தவருன எண்ணத்தை என்னல் இயன்ற அளவு களையக் கடமை பட்டிருக்கிறேன். எல். ஐ. சி.யின் முதலீடுகள் சரியான முறையில் இடப்படவில்லை என்று நான் அறிவிக்கப் பட்டதும், நான் அந்தப் பொருள் பற்றிப் பல கடிதங்களைத் (எல். ஐ. சி) தலைவருக்கு எழுதினேன். இது எட்டுத் திங்கள் நடந்தது. அதை இயக்குபவரோ, அதுபற்றிய குழுவோ தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை, அவர்களிடமுள்ள பயங்கரமான குற்றச்சாட்டுகளுக்கு மாருக. அதற்குப் பின்னர் தான், எல். ஐ. சி. முதலீட்டு நிர்வாகத்துடன் நான்தொடர்ந்து ஒத்துழைப்பதால் எந்தப் பயனுள்ள செயலும் நடைபெறவதில்லை என்று உணர்ந்து, (எல். ஐ. சி.யில் உள்ள) என் பதவியை விட்டுவிலகினேன்.

அதன் பின்னர் நான் விளக்கமாக நிதியமைச்சருக்கு ஒருமடல் எழுதினேன். அதில், தவருன முதலீடுகள் பற்றியும், அதாவது எல். ஐ. சி.யின் பெயருக்குப் பாதகமாக முதலீடுகள் நடந்த வழிகளையும் காலங்களையும், ஒருகுறிப்பிட்ட கும்பலுக்கும் வணிகர்கட்கும் உதவுதல் பற்றியும்எழுதியிருந்தேன். இது 1959-ம்ஆண்டு ஆகஸ்ட் திங்களில நடந்தது.

— 10-ம் பக்கம் —

நான்கு நாட்கள்

அன்புள்ள வளவா,

தென்னகத்து விடுதலை இயக்கம், ஒரு பல்கலைக் கழகம். அங்கே அறிஞர்களும் நாவலர்களும் கலைஞர்களும் கவிஞர்களும், சொல்லின் செல்வர்களும் சிந்தனையாளர்களும் செயல்வீரர்களும் தொண்டர்களும் நிறைந்து இருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை; நான் சொல்லித் தெரியவேண்டுவன அல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களிலே ஒருவனான எனக்குக் கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தலைவர்களிடமும் தொண்டுள்ளம் படைத்த நண்பர்களிடமும் பழகக்கூடிய வாய்ப்புக்கள் நிறையக் கிடைத்திருக்கின்றன. இந்த வாய்ப்புக்களால் நான் அடைந்தபெருமைக்கும் அளவில்லை என்பதை நீ அறிவாய்.

நமது இயக்கத்திற்கு கிடைத்த அரும் பெரும் விடுதலைக் கவிஞரான ஆசிரியர் கண்ணதாசன் அவர்களின் பிப்ரவரித் திங்கள் சுற்றுப்பயணத்தில் நான்கு நாட்கள், கூடச்செல்லும் வாய்ப்புப் பெற்று, அடைந்த இன்பமும் மகிழ்ச்சியும் அளவில்லை.

காரைக்குடி, வணிகச் சிறப்பும் பொலிவும் கொண்டு விளங்கும் நகராகும்; ஆசிரியர் அவர்களை நாட்டுக்குத் தந்து புகழெய்திய நகருமாகும்; ஆசிரியர், தம் இல்லத்திலிருந்து 20-2-60 மாலை 4-30 மணியளவில் தஞ்சை முரசு படிப்பக ஆண்டு விழாவில் சொற்பெருக்காற்றப் புறப்பட்டார்கள். நானும் ஆசிரியருடன் சென்றேன்.

காரைக்குடியிலிருந்து தஞ்சைக்குக் காரிலே சென்று கொண்டிருந்தோம். ஊர்கண்ட இடங்களிலெல்லாம் கழகக் கொடிகள் பறந்த வண்ணமாகவே இருந்தன வழியிலே ஆதனக்கோட்டை என்ற சிற்றூர் காரிலே வந்து கொண்டிருந்த ஆசிரியரைக் கண்ட இளைஞர் ஒருவர் வணக்கம் செலுத்தினர்; ஆசிரியரும் வணக்கம் செலுத்திக் காரை நிறுத்தி விட்டார்.

அந்த இளைஞர், சுமார் 60 வயதுடைய ஒரு முதியவரைக் காண்பித்து, "இவர்தான் அண்ணை, இவ்வூர்ச் செயலாளர்" என்று ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தியதும், ஆசிரியர் முதியவருக்கு இளங்குருதி ஓடுவது கண்டு மகிழ்ச்சி தெரிவித்தார்.

'சிறியவர்களால் இயக்கப்படுகிறது தி. மு. க.' என்று சொல்லும் சோற்றால் அடித்த பிண்டங்களிடையே, இப்படிப்பட்டமுதியவர்களும் விடுதலை இயக்கத்தில்பற்றும்பாசமும்கொண்டு உழைக்கின்ற காட்சியைக் கண்ட நானும் கூடவந்த நண்பர்களும் அடைந்த உவப்புக்கு அளவில்லை.

இவர்களிடையே விடை பெற்ற ஆசிரியரோடு, நாங்களும் புறப்பட்டோம் தஞ்சை மாநகருக்கு. இரவு ஏழுமணியளவில் நன்செய் வளம் கொழிக்கும் தஞ்சைக் குறிஞ்சித் தெருவில் உள்ள முரசுபடிப்பகத்தை அடைந்தோம். பதியும் படுவும் ஆசிரியரையும் எங்களையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்கள்.

தஞ்சை, திருச்சியில் மக்கள் வெள்ளம் களம் கண்ட இடத்தில் உணர்ச்சி மறவர்கள்

படிப்பகத்தின் பொதுக் கூட்டத்தில் ஆசிரியர் 2 மணிநேரம் சொற்பொழிவு ஆற்றினார்கள். அல்ல; அல்ல. குறிஞ்சித் தெருவில் கூடியிருந்த மக்களின் வயிறு வெடிக்கச் சிரிக்க வைத்துச் சிந்தனையைக் கிளறினர் என்றால் மிகையாகாது.

பின்னர், பதியின் நிர்வாகத்தில் நடக்கும் பள்ளி மாணவர்களின் பகல் உணவு விடுதி நிதிக்காக ஆசிரியர் ரூ. 500/ நன்கொடையளித்தார்கள்.

இறுதியாக, தஞ்சைநண்பர்களிடம் விடைபெற்றுத் திருச்சி நகர் வந்து தங்கினோம்.

21-2-60 காலை 9 மணிக்கு இலால்குடி முத்தமிழ் மன்றத்தின் 'திருவள்ளுவர் விழாவில்' கலந்துகொள்ளப் புறப்பட்டோம். திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் ஆசிரியருடன் வந்தார். செல்லும் போது ஆசிரியரும் அன்பிலும் நகைச் சுவையாகப் பேசிக்கொண்ட பேச்சுக்கள், இன்னும் என் செவிப் பறையிலே ஒலித்தவண்ணம் இருக்கின்றன. தோழா! அவை அத்துணை அருமை; அருமை!

நகைச்சுவை மன்னர் இறந்து விட்டார் என்றே எண்ணுவாய் நீ. இறக்கவே இல்லை. ஆசிரியர் கண்ணதாசன் உருவிலே நடமாடிக் கொண்டிருக்கிறார். ஆசிரியருடன் பழகுபவர்கள் இதை நன்கு உணருவார்கள்.

இலால்குடியில், வள்ளுவர் விழாவில் ஆசிரியர், திருக்குறளின் கருத்துச் செறிவுகளை அள்ளித் தந்தார். வாழ்க்கையை மக்கள் மன்றத்தின் முன்னே கொண்டு வந்து நிறுத்திக் காட்டினர். தனக்கென வகுத்துக்கொண்ட தனிப் பேச்சு மூலம்.

சொற்பொழிவு முடிந்தவுடன் விடை பெற்று திருச்சி நகரடைந்து, தேவர் மன்றத்தில் நடைபெற்ற பாண்டியன் படிப்பக ஆண்டு விழாவில் கலந்துகொண்டு சீரிய முறையில் சொற்பெருக்காற்றினர், ஆசிரியர் கண்ணதாசன்.

நகரச் செயலாளர் எம். எஸ். மணி, பராங்குசம், பாண்டுரங்கன், செரீப் மற்றைய நண்பர்கள் இன்முகத்துடன் ஆசிரியரை வரவேற்ற காட்சி சிறப்பாக இருந்தது.

பகல் உணவுக்குப்பின் தாத்தையங்கார்பேட்டை பொதுக்கூட்டத்திற்கு ஆசிரியர் புறப்பட்டார். தோழர் முத்துக்கருப்பன், மாற்றார் மருளும் அளவுக்கு மக்கள் வெள்ளத்தைக் கூட்டியிருந்தார்.

இடையிலே ஒரு சிற்றூர்க் கூட்டத்தில் கலந்துவிட்டு, ஆசிரியர் தாத்தையங்கார்பேட்டை சென்றார். அந்த கழக நண்பர்களும் பொது மக்களும் ஆசிரியரை எதிர்கொண் டழைத்துப் பூரிப்படைந்தனர்.

ஊராட்சி மன்றத்தினர், நமது ஆசிரியருக்கு வரவேற்பளித்தனர். தென்னகத்துத் தலைவராம் அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தை ஆசிரியர் தம் கைகளால், பலத்த ஆரவாரங்களுக்கிடையே திறந்து வைத்தார். பின்னர் ஊராட்சி மன்றத்தினரால் அமைக்கப்பட்ட 'திருவள்ளுவர் பூங்கா'வையும் திறந்து வைத்தார்.

இறுதியாகப் பல்லாயிரக் கணக் கான மக்கள் திரண்டிருந்த கழகப் பொதுக் கூட்டத்தில், விடுதலை தாகத்தை மேன்மேலும் தூண்டினார் ஆண்ட இனத்தின் வரலாற்றைச் சொல்லி, மீண்டும் ஆள வேண்டும் என்று முரசு கொட்டினர்.

கூட்டம் முடிந்தபின் கல்லக்குடி சென்றோம். 'விடுதலைப் போர்க்களம் சமைத்துத் தந்து, பெருமைகொண்ட கல்லக்குடியை ஆசிரியர் சந்தித்தார் கடந்த கால விடுதலை இயக்க நிகழ்ச்சிகளைக்கண்முன்னேகொண்டு வந்து நிறுத்தியது கல்லக்குடி.

கழகக் கட்டிட நிதிக்காக நடந்த முரசொலி சொர்ணம் எழுதிய "விடை கொடு தாயே" நாடகத் திற்கு ஆசிரியர் தலைமை தாங்கினார் நாடகமும் சிறப்பாக நடந்தேறியது பின், இரவே வந்தடைந்தோம் திருச்சி நகர்.

22-2-60 இரவு தமிழ்ப் பேரரச கள் புகழ்பாடும சரூர் நகரில் கழக பொதுக்கூட்டம். ஆசிரியர் அவர்கள் இடியென முழங்கினார்கள். திராவிடத் தின், வாழ்ந்து வீழ்ந்த வரலாற்றை மக்கள் மன்றத்திலே கொண்டு வந்து குவித்தார்கள். விடுதலையின் விரைவை விளக்கிப் பேசி, போர் படையை உருவாக்கினர்.

மறுநாள் மாலை 5 மணிக்கு, புதுக் கோட்டை அரசர் கல்லூரியில ஆசிரி யரின் சொற்பொழிவு. மாணவர்கள் பெருங் கூட்டமல்லாது, பொதுமக் கள் கூட்டமும் நிறைந்துவிட்டது.

அரசர் கல்லூரி மாணவர்களை திராவிடம் நன்கறியும். கவிஞர் 'வேலும் மயிலும்" என்ற தலைப்பில் பேசினார்கள். வேல், களத்திலே போர் புரிந்தது. மயில், வீட்டிலே ஆட்டம் ஆடியது.

இலக்கியம் இன்னிசை விருந்தளித் தது; அகம் அன்னநடை போட்டது புறம் ஏறு நடை போட்டது, மாண வர்கள் மத்தியில். இவையெல்லாம் கண்டு மகிழ்ந்த தமிழ்த்தாய், ஆசிரி யரின் நாவிலே களிநடம் புரிந்தாள் குழைந்து குழைந்து விளையாடினாள்

இந்த நான்கு நாட்கள் எனக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நீயே உணர்ந்திருப்பாய், நண்பா சுருங்கக் கூறின் "பூவோடு சேர்ந் நாரும் மணம் பெறுவது போல நானும்.........

விடைபெறுகிறேன் நண்ப.

அன்புள்ள
உயிர்த்தோழன்,
கோ. ஆ. தமிழ்ச் செல்வன்

அமைச்சர்களே! பதில் என்ன?

"நகரத்தில் வசூலிக்கும் மோட்டார் வாகன வரியில் உரித்தான பங்கை மாநகராட்சிக்கு அளிக்கும்படி அடிக்கடி அரசினரைக் கேட்டுக் கொண்டுள்ளோம். நகரின் சாலைகளின் பெரும்பகுதியை உபயோகிப்பது சர்க்காரின் பஸ்ஸுகளும், தனியார்களின் மோட்டார் வண்டிகளுமே யாகும். இயந்திர சக்தியால் ஓடக்கூடியவைகளும், லாரிகளும் தினசரி வளர்ந்த வண்ணமாகவே இருக்கின்றன. சாதாரணமாக நம்முடைய நகரின் சாலைகளின் உறுதியானது, இந்த அதிகரித்துள்ள போக்குவரத்தைத் தாங்கக் கூடியதாக இல்லை. ஆகவேமுக்கியச்சாலைகள் அடிக்கடி பழுது பார்க்கப்படவும் திருத்தியமைக்கப்படவும் வேண்டியுள்ளன. இப்படி நமதுவருமானத்தை முக்கியச்சாலைகளில்அதிகமாகச் செலவிட்டு ஏற்பட்டுள்ள வண்டிப் போக்குவரத்தைச் சமாளிப்பதன் மூலம், நகரின் உள்பகுதியில் இருக்கும் சாலைகளை நன்கு பராமரிக்க முடியாதபடி நமது நிதி நிலைமை குறைந்து விடுகின்றது. மோட்டார் வாகன வரிச்சட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகைகள் சாலைகளின் அபிவிருத்திக்கே பயன் படவேண்டும் என்பது நாடறிந்த ஒன்றாகும். ஆகவே முக்கியச்சாலைகளை சர்க்கார் நியாயத்தின் அடிப்படையில் நிர்வகிக்க வேண்டியவர்களாவார்கள். நகருக்கு வெளியே, சர்க்கார் தனது நெடுஞ்சாலை இலாகாவின்மூலம் நெடுஞ்சாலைகட்கானஅபிவிருத்தியை நகரத்திலிருந்து கிடைக்கும்வருமானத்திலிருந்தும் கூடச்செலவழித்துச்செப்பனிடுகிறது. அதே நேரத்தில் நமது சாலைகளை பராமரிப்பது அவ்வளவு முக்கியமானதாக சர்க்காருக்குப் படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சர்க்கார், தான் மோட்டார் வரியின்மூலமாகப் பெறும்தொகையில் நல்ல அளவு தந்தால் ஒழிய, மாநகராட்சியில் முக்கியமான சாலைகளை நிர்வகிப்பது இயலாததாகும். சாலைகளைப் பராமரிக்கவும், அபிவிருத்தி செய்யவும் ஏற்படும் செலவு சுமார் ரூ. 60.00 லட்சமாகும்.

இதுபற்றிய நம்முடைய சட்டபூர்வமானதும் நியாயத்தின் பாற்பட்டதுமான கோரிக்கைகளை பொதுமக்களும், பத்திரிகையாளரும் உணர்ந்து ஒப்புக்கொண்டுள்ளார்கள். இந்த நியாயமான கோரிக்கைக்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டியது அவர்களது கடமையாகும். நம்முடைய கோரிக்கையைச் சர்க்கார் ஒப்புக்கொள்வார்களேயானால், நமது மாநகராட்சிக்கு சுமார் ரூ. 50.00 லட்சம் வருமானமாகக் கிடைக்கும்."

—சென்னை மாநகராட்சி வரிவிதிப்பு—நிதி நிலைக்குழுத் தலைவர் **வி. முனுசாமி** அவர்கள் 1-3-60-ல் சமர்ப்பித்த சென்னைமாநகராட்சி வரவு செலவுத் திட்டப் பேச்சின் ஒருபகுதி, இது.

மழலை :

"கொள்ளையையும் கொலையையும் கூட்டோடு ஒழிப்பதற்குத்தான் அரசாங்கம் இருக்கிறது. ஆனல் அரசாங்கமே அந்தப் பணிகளைப் பிறவிக்கடன்களாகக் கொண்டு விட்டால்...?'

மாறநம்பி, தமக்கிருக்கும்பேராபத்தை எண்ணிப் பார்த்தான். சோமாவதியையும் குமரனையும் இட்டுக் கொண்டு நடந்தவன் எதிர்த்திசையில் வரும் குதிரைகளின் குளம்பொலி கேட்டுத் திடுக்கிட்டான். அவளையும் அவனையும் ஒருபுதருக்குப்பின் இழுத்துச்சென்ருன். அங்கே சிறிதுநேரம் மறைந்திருந்தனர். அங்கே இருந்தபடி அவர்கள் அழல் உமிழும் வானத்தைப் பார்த்தார்கள். எங்கும் தீயின் நாவுகள். அந்தி வானத்தைப் பார்த்து, அதன் அழகில்மயங்கியிருக்கின்றனர் அவ்விருவரும். 'கொல்லன் உலை இரும்புத்தகடுபோல் ஒளிர்கிறது!" என உவமைகளைக் கூறி மகிழ்ந்திருக்கின்றனர். ஆனல் அதே அந்திவானம்போல் ஒளிரும் இச்செந்தீ வானத்தைக் கண்டு நடுங்குகின்றனர்!

மாலை வேலைகளிலே நெடுஞ் சாலைகளிலே விரைந்தோடும் குதிரைகளைக் கண்டு அவர்கள் ஆரவாரம் செய்திருக்கின்றனர். "ஓட்டு! ஓட்டு! இன்னும் வேகமாக ஓட்டு!" என்று ஆரவாரமாகத் தூண்டியிருக்கின்றனர் பல நாட்கள். ஆனல் அந்த நேரத்தில் கொள்ளைக்காரர்கள் ஓட்டிவந்த குதிரைகளைக் கண்டதும் அவர்கள் நெஞ்சு கலங்கியது! ஒவ்வொரு பொருளுக்கும் இரண்டு முனைகள் போலும். ஒன்று இன்பத்தையும் மற்ருென்று துன்பத்தையும் மாறி மாறித்தரும் போலும்! அவர்கள் மூவர் நெஞ்சும் இதே வழியில் சிந்தித்தன. எந்த வினடியிலும் காடையர் கண்ணில் தாம் பட்டுவிடலாம் என்ற அச்சம் அவர்கட்கு இருந்தே வந்தது. அப்போதே அவர்கள் கண்ணில் மூவரும் பட்டுத் தொலைத்திருந்தாலும் கவலையில்லை!

கண்மண் தெரியாது வெறியாட்டம் ஆடி ஓடிய காடையர் கண்களுக்கு இவர்கள் மறைந்திருப்பது, தெரியாது போயிற்று. அவர்கள் ஒரே மூச்சாய் அடுத்த கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

சேமாவதிக்கு மயக்கம் வரும்போல் தோன்றியது. "அமைதியின் பிறப்பிடத்தைத்தான் தொழுகின்றன, இந்தக் கொடுவிலங்குகளும்! என்ன பயன்? மலரைத் தூவுவதாலோ, மண்டியிடுவதாலோ வந்துவிடுவதில்லை மனிதப்பண்பு!" என்று அவள் நினைத்தாள். அந்த நினைவே அவளைத் தலை குனிய வைத்தது. அந்தத் தலைக்குனிவே அவள் நெஞ்சைப் பிழிந்தது; தள்ளாடினுள்.

குமரன் அவளைத்தேற்றி அழைத்துச் சென்ருன். நெடுகச் சென்றனர். வழியிலே பொழுது புலரத் தொடங்கியது. புள்ளினங்கள் குரலெழுப்பின.

கவலையற்ற பறவைக்கூட்டம். அந்தச் சின்னஞ்சிறுபறவைகளின்பொழுது, எவ்வளவு மகிழ்ச்சியுடன்உதயமாகிறது! அவற்றின் கூடுகளிலே அதிகாலைப் பொழுது இன்பநடனம் ஆகிடுறது. மனித நெஞ்சங்களிலே மட்டும் அது வெறிக் கூத்தாடுவதோ? புள்ளினங்கள் மகிழ்ச்சிப் பள்ளுடன் எழுகின்றன. மனிதக் கூட்டம் மட்டும் ஏன் ஓலக் கற்றைகளை ஒலிபரப்பிக் கொண்டு எழுகிறது? "நாளையப் பொழுதாகிலும் நல்ல பொழுதாக விடியுமா?" என்ற சோகச்சிந்தனைகளும் துன்ப நினைவுகளும் ஏன் மனித இனத்தைக் குடைகின்றன? வேதனை இதுவாக வெந்து மடியும் நெஞ்சுடன் நடந்து கொண்டிருந்த அவர்கள், பறவைக் கூட்டத்தின்மேல் பொருமைப் பட்டார்கள்!

"நம்பி! இனி, மேலும் செல்வது நல்லதா? ஒளிக்கற்றைகள் உலகத்தைத் தட்டி எழுப்புகின்றனவே!"

"ஆமாம்... அதைத்தான் நானும் நினைக்கிறேன்! இன்னும் கொஞ்ச தொலைபோனல் மாவெலிகங்கைக் கரைவரும். கரையைஒட்டி நீங்கள் நிலையாகத்தங்க ஓரிடம் பார்ப்போம். காட்டில் அமைதி நிலவும் வரையில் நீங்கள் அந்த இடத்திலேயே இருக்க வேண்டும். இரண்டு மூன்று நாட்களில் சிறிய வீடொன்று கட்டி முடிப்போம். நாட்டு நிலைமை திருந்தும்போது உள் நாட்டில் சென்றுவாழ்வோம். இளவரசி! இதைத் தவிர வேறு வழியிருப்பதாக எனக்குப் படவில்லை. மாளிகையில் வாழ்ந்தவர்களை மண்குடிசையில் வாழ வைக்கும் எங்களை மன்னித்து விடுங்கள்!" என்ருன், நம்பி.

குமரனின் தோளில் சாய்ந்தவாறே நடந்து வந்த சோமாவதி நம்பியை ஏமாற்ற முயன்ருள், தனது சிரிப்பின் மூலம். ஆனல் குமரன் அவளைக் கிண்டல் செய்தான்.

"நம்பி! இவள் உன்னை ஏமாற்ற முயல்கிருள். இவளுக்குத் தொல்லை தான். என்றுமே இப்படிக் காடுமேடுகளில், அதுவும் இந்த இருளில்நடந்து பழக்கப்பட்டவளில்லை, இவள். என்ருலும் உன்னையும் என்னையும் ஏமாற்றத் துடிக்கின்ருள். அவள் துடிப்பிற்காக நாம் ஏமாறுவோம்!" என்ருன் குமரன்.

அவள் இடைமறித்தாள். "இம்... இம்...அப்படி எல்லாம் இல்லை! அப்போது காலில் குத்தியதே முள்; அதை எடுத்து எறிந்ததோடு அத்தனையையும் மறந்துவிடவில்லையா? அது போல் தான் வாழ்வும்! துன்பங்கள் ஆயிரம் வந்து குத்தும். ஆனல் அத்தனையையும் உடனுக்குடன் மறந்துவிட வேண்டும்; களைந்தெறிந்துவிட வேண்டும். அந்த வழியில்தான் நான் செல்கிறேன்!" என்று கூறினுள்.

அவள் துன்பத்தை மறைத்துக் கொள்வதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'நம்பி! மேடானதும் மரங்கள் அடர்ந்திருப்பதுமான ஓர் இடத்தைப் பார் இனி சோமாவால் நடக்கமுடியாது. சான்று, வலி எடுக்கும் என் தோள்!" என்ருன்.

★

சிலருக்கு மலர் பறித்துச் சூடுதலில் நாட்டம். சிலருக்கு நூலெடுத்துப் படித்துப் பார்ப்பதில்ஆசை. வேறு சிலருக்கு, பொன்னும் மணியும் குவித்து வைப்பதில் தணியாத தாகம். ஆனல் துட்டகமுனுவுக்குத் தமிழர்கள் தலையை வெட்டிக் குவித்தலில் அளவிலாத விருப்பம்! அவன் தலையெடுத்த நாள் தொட்டு இதே வெறியில் அலைந்தான். அவன் சிறுவனுய்த் திரிகையில் இலங்கையின் பெரும்பரப்பை ஏலாளன் என்ற தமிழரசன் ஆண்டு வந்தான். ஆற்றல் செறிந்த மறவனுய் அவன் திகழ்ந்ததால், சிங்களவர்கள் ஓடி ஒளிந்துகொண்டிருந்தனர். எங்கோ ஒரு மூலையில் கிடந்த அரசொன்றை ஆண்டுகொண்டிருந்த காகவண்ணனுக்குத்தான் துட்டகமுனு பிறந்தான். அவனது காவாலித்தனமான வெறிப்போக்கை காகவண்ணனே கண்டித்திருக்கிருன். ஆனல் காட்டு எருதாய்த் திரிந்த துட்டகமுனு, தனது தகப்பன் மாண்டதும் தமிழர்களை எதிர்த்துப் போர்ப்பறை யறைந்தான். அப்பனின் அரசைக் கைப்பற்றிக்கொண்டு, தமிழரை எதிர்த்து முரசைத் தட்டிக் கொண்டு அவன் நடந்தபோது...

இலங்கையில் கிழக்கு நோக்கி ஓடி, திரிகோண மலையருகில் தன் பயணத்தை முடித்துக்கொள்ளும் பேராறு மாவெலிகங்கை! அதுதான் ஏலாளன் அரசுக்கும் சிங்களவர் நிலத்துக்கும் எல்லைக் கோடாகத் திகழ்ந்தது. வடகரையில் தமிழர் ஆட்சி. தென்கரையில் சிங்களவர் ஆதிக்கம். இரு சாரரும் பொருதும் நிலைமை ஏற்பட்டது. துட்டகமுனு போர்முரசு தட்டியதும், வடகரையில் தமிழரசனின் கீழ் இருந்த படைத்தலைவர்கள் கட்டியிருந்த கோட்டைகளை ஒவ்வொன்ருய் சாய்த்துக் கொண்டே வந்தான், துட்டகமுனு. நாலிகா என்ற கோட்டையை ஆண்டு கொண்டிருந்த படைத்தலைவன் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டான் பட்டத்து யானை மீதூர்ந்து படை எடுத்த துட்டகமுனு, விசிதபுரத்து கோட்டை முற்றுகையில்தான் படாத பாடு பட்டான். வெறியூட்டப்பட்ட பட்டத்து யானை அக்கோட்டையின் கதவை இடிக்கப் பட்ட பாடு, அவன் அந்த நாளில் அறியாத பாடு! ஒரு வழியாக கோட்டையின் கதவு தகர்க்கப்பட்டு, வெற்றிக்கொடி பறந்தபோது கண்டகாட்சிஉள்ளத்தை உருக்குவதாகும். போரின் முடிவிலே, கோட்டைக்கருகிலிருந்த தெண்ணீர்க் குளம் செங்குருதிக் குளமாகஅலைந்தது என்று வரலாற்ருசிரியர்கள் சொல்கின்றனர்.

விசிதபுரத்தை வென்றபின் துட்டகமுனு ஏலாளனின் தலைநகருக்குச் சென்ருன். ஏலாளனும் போருக்கெழுந்தான்; சென்ருன். படைகளெல்லாம் ஒருபுறம் ஒதுங்கியே நின்றன. ஏலாளனும் துட்டகமுனுவும் மட்டுமே போராடினர். துட்டகமுனுவின் வாளுக்குப் பலியானுன் ஏலாளன். வெற்றிக்கொடியின் நிழலில் குடியேறிய துட்டகமுனு ஆற்றல் மிக்க தமிழ்ச் சமூகத்தைச் சந்தர்ப்ப வசத்தால் வென்றுவிட்டாலும் வருநாளை எண்ணிப் பார்த்தான். தமிழர்கள் தன்மீது பழி வாங்குவதைத் தடுப்பதற்காக, அவர்கள் எண்ணத்தை மாற்றுவதற்காக, ஏலாளனுக்குத் தானே ஒரு கல்லறையை எழுப்பினுன். அதே நோக்கத்தோடுதான் இந்தப் படையெடுப்பின்போது, பௌத்தனுன அவன், திருக்கோணமலையில் முருகன் கோவில் ஒன்றைக்கட்டி வைத்தானும். வரலாற்ருராய்ச்சியாளர்கள் இப்படியும் கருதுகின்றனர். அக்பர் தனது பேரரசைக் காத்துக் கொள்வதற்காகத் தான் இந்துக்களுடன் உறவாடினுர் என்றும் ஒரு கருத்துண்டு. அது போலவே இதுவும்.

ஏலாளனை வென்ற துட்டகமுனு அனுராதபுரத்தில் ஆட்சிக்கட்டிலேறினுன். தன்னேடு படை எடுப்பில் உதவியவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கோட்டையையும் தந்தான். சிலர் அவன் அருளில் தனி நிலமும் பெற்றனர்.

★

விசிதபுரத்தை ஒட்டிய காட்டுப் பகுதி ஒன்றில்தான் மூவரும் நின்றனர். மாவெலி கங்கையின் கரையிலிருந்த அக்காட்டிற்கு வருவோரும் கிடையாது; போவோரும் இல்லை! விலங்குகள் தவிர வேறு எவையும் நடமாடாத அந்தக் காடு, அமலசிங்கேக்கோ, அமரசேனேக்கோ தெரியாத பகுதி. அவர்கள் அதிகாரம் கொக்கரித்த பகுதிக்கு இருபது கற்களுக்கு அப்பால் அது கிடந்நது.

மூவரும் ஆற்றங்கரையில் கைகால்களைக் கழுவிக்கொண்டு கரையேறினர். கதிரவனும் முழுக்க எழுந்து விட்டான். கரைக்குச் சற்றுத் தொலைவில் வந்து உட்கார்ந்து இளைப்பாறினர்.

"இன்னும் மூன்று நாட்கள்வரை உங்களுடன் இருப்பேன். பிறகு நான் போகிறேன். கூடுமானவரை, யார் கண்ணிலும் படாது நடமாடுங்கள். கிழமைக்கொரு முறை வந்து போகிறேன். வேண்டியனவெல்லாம் அவ்வப்போது கொண்டு வருவேன். நாட்டின் நிலை திருந்தியதும், மறுபடியும் எங்காகிலும் ஓர் ஊரில் போய் வாழலாம்!" என்ருன் மாறநம்பி.

★ மா.பாண்டியன் ★

— 10-ம் பக்கம் —

கல்லூரிக் கவியரங்கம்

உ. காதல்.

★

வணக்கம்.

கள்ளமிலா மனத்தாலே கவிதை யாத்து
கனித்தமிழின் வளர்ச்சியினைப் பேணிக் காத்து
உள்ளமெலாந் தமிழுணர்ச்சி ஒன்றே பெற்ற
ஓங்குபுகழ்க் கவியரங்கத் தலைவ! இங்கே
தெள்ளுதமிழ்க் கவிதையிலே 'காதல்' என்ற
தெரியாத ஒன்றினையே தேர்ந்தெ டுத்துத்
துள்ளுகின்ற மனத்தினிலே இன்பம் பொங்க,
தூயவரே! தோன்றியதைப் பாடு கின்றேன்!

நூல்.

மங்காத மறையாத நிலையில் அன்று
மறத்தமிழர் மனத்தினிலே நிலைத்த காதல்
பொங்கிவரும் இன்பத்தால் களிப்பை ஈந்து
புத்துணர்வால் பண்பாட்டை வளர்த்து; நாளும்
திங்களைப்போல் தேய்கின்ற வழக்க மின்றித்
தேயாத நிலையினிலே திகழ்ந்த தோடு
தங்கத்தின் ஒளிகுன்றுத் தன்மை யைப்போல்
தமிழருடை நெஞ்சத்தில் மிளிர்ந்த தந்நாள்!

அன்றந்த நிலையினிலே திகழ்ந்த காதல்
அருந்தமிழர் போற்றியுமே புகழ்ந்த காதல்
இன்றில்லை; காதலினைப் பேணிக் காத்து
இலக்கணமே வகுத்திட்ட பெருமை யெல்லாம்
சென்றதுவே இடுகாடு தன்னை நோக்கி!
செம்மைதனை இழந்ததொரு நிலையில் இன்று
நன்றான காதல்தான் வேண்டு மென்றால்
நன்பகலில் விண்மீனைத் தேடிப் பார்ப்பீர்!

காதலர்தாம் இருக்கின்றார் நாட்டில் எங்கும்;
கடைக்கண்ணின் வீச்சாலே கருத்தை ஈர்க்கும்
காதலியர் இருக்கின்றார்; ஆனால் இன்று
களங்கமிலா உளத்தினிலே திகழுந் தூய
காதலிங்கே இல்லையெனத் துணிந்து சொல்வேன்!
கருத்தினிலே தெளிவில்லா நிலையில், அந்தோ!
காதலென்ற பூங்காவின் பெயரைச் சொல்லி
காமமென்ற சுடுகாட்டில் உலவு கின்றார்!

அரும்புகின்ற பருவத்தாள்; அழகுப் பெண்ணாள்;
அத்தகைய எழில்மங்கை தன்னைக் கண்டு
விரும்பியுமே காதலிப்பார்; வண்டைப் போலே
வெவ்வேறு பெண்மலரைத் தேடிச் செல்வார்!
கரும்புநிகர் இனிமையிலே காதல் என்று
கண்மூடி நம்பியதால் புயலிற் சிக்கித்
திரும்பிவர இயலாத படகைப் போலே
திணறுகிறார் காதலெனுங் கடலில் வீழ்ந்து!

போற்றிமிகப் புகழ்மாலை சூட்டி, 'மண்ணில்
பொழிகின்ற மழைநீரும் கலத்தல் போலே
ஏற்றதொரு காதலரின் அன்பு நெஞ்சம்
இயற்கையிலே கலந்துவிடும்' என்றார் முன்னோர்!
மாற்றமுறு வாழ்வினிலே மடமை பெற்று
மலர்க்காதல் மாய்கின்ற நிலையில் இன்று
தூற்றியதோர் காதலுக்குப் பாடை கட்டித்
தூக்கியவர் செல்கின்ற நிலையைக் கண்டோம்!

இந்தவொரு சூழ்நிலையும் நீடித் தாலே
இழிநிலையில் தான்காதல் இருத்தல் வேண்டும்!
செந்தமிழர் அன்றொருநாள் போற்றிக் காத்த
செழுங்காதல் தன்னையுமே பெற்று வாழும்
அந்தநிலை தனையின்றே அடையப் பெற்றால்
அம்மம்ம! என்சொல்வேன் காத லாலே
எந்தவொரு துன்பமுமே இன்றி; நாமும்
இன்பமலர்ப் படுக்கையிலே துயில லாமே!

காதலினால் அருங்கலைகள் வளரும்; வாழ்வில்
களிப்பூட்டும்; மகிழ்வூட்டும்; இன்பம் சேர்க்கும்;
சாதலையே துச்சமென எண்ணச் செய்யும்;
சாதிப்பேய் தனையொழிக்கத் துணையாய் நிற்கும்;
ஆதலினால் 'காதலினைச் செய்வீர்' என்றே
அரசகவி பாரதியும் சொல்லிப் போனான்!
பேதமிலா நிலைவளர்க்கும் காதல் தன்னைப்
பிரியமுடன் வாழ்த்திவிடை பெறுகின் றேன்நான்!

—பி. பாலசுப்ரமணியன்.

★

மணிவேந்தன் எனும் புனைபெயர் கொண்ட நண்பர் பாலசுப்பிரமணியன் சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர் ஆவார்.

★

உருவகம்:

அச்சாணி

''மன்னுதி மன்னன் எவனுமே உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்டது கிடையாது. ஆனால் நான் என் மதியூகத்தால் மண்ணையென்ன ? விண்ணையும் ஆண்டுவிட்டேன்!'' என்று அந்தப் புலவன் அடிக்கடி கூறிக்கொள்வது உண்டு.

'கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்புத்தானே' என்று கூறி வேறு அவனுக்குப் பலர் ஆலாபணங்கள் செய்தனர். கற்பின் மகளிர்போல ஒசிந்து இருக்க வேண்டிய அந்தக் கற்றோன் மூங்கில் முனைபோல நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தான்.

ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர் பலர்; கொம்பிலே பூக்கள் கண்டாலே கிளை நெளியும்; பூ பிஞ்சாகிவிட்டாலோ நெளிந்த கிளை வளையும்; பிஞ்சாகிக் காயாகி முற்ற ஆரம்பித்துவிட்டாலோ வளைந்த கிளை தாழ்ந்தேவிடும். இதுதான் இயற்கையின் நியதி. இப்படித்தான் கற்றோர் எவரும மற்றோருடன் மாறுபட்டிருப்பர்.

ஆனால் இவனோ, எண்ணங்களின் இருப்பிடம்தான்; எழுச்சியின் ஏந்தல்தான்; அதிமேதைதான்; அறிஞன்தான். என்றாலும் அத்தனைக்கும் மொத்தமாக, தானே யாவும்; தனக்கே இவ்வுலகம் என்ற பித்த மனம் கொண்டல்லவா இருக்கிறான்; இவனின் அறிவை எண்ணி அதிசயக்கிற அதே நேரத்தில் ''மமதைகொண்ட மனத்தோனாகக் காட்சியளிக்கிறானே! யாரால் மட்டந்தட்டப்படப் போகிறானோ'' என்று தங்கள் தங்கள் மனத்தூடே எண்ணியும், மமதையாளனின் நிலை குறித்து இரங்கிப் பேசியும வந்தனர், சிலர்.

புலவனோ காலமெனும் தேரேறி ஞாலமெங்கணும் சென்று வாதக்களங்கள் பலவற்றிலே வெற்றியாரம் சூடி, புகழ்பாடி நின்று, விறு பல பெற்று, பெருமையுற்று, நிலவி வந்தனன்.

மமதையில் மட்டம் தட்டப்படுவான் என்று எண்ணி எதிர் பார்த்தவர்கள்கூட இனி இவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது என்று முடிவெடுத்தனர். இவன் உலக நியதிக்கு அப்பாற்பட்ட புதிய நியதிபெற்றவன் போலும் என்று கருதிவிட்டனர்.

இனி என்ன? எத்திசைச் சொல்லினும் அத்திசை யாவும் ''புலவருலக மேதையே வருக! வருக!'' என்ற வரவேற்பு வளைவு களைத் தவிர வேறு எதையும் காண முடியவில்லை அவனால்.

காலம் ஓடியது. அவனின் கருத்துக்கள் கற்றோர் மற்றோர் யாவர் உள்ளத்திலும் உறவாடின. புலவன் இறுமாப்பின் உச்சாணியிலே இருந்து இவ்வுலகை நோக்கியபடி இருந்தான். உலகமோ அவனின் இறுமாப்பு அவனுக்குத் தகும், தகும் என்றது.

இந்நிலையில்...ஒரு நாள்! எவனுமே எதிர்பாராத கேள்வி அவனைத் தாக்கியது. 'ஆகா...புலவனைப் பார்த்தா இந்த அடிமுட்டாள் கேட்பது?' என்று ஆத்திரப்பட்டனர். அந்த அடிமுட்டாள் எனப்பட்டவனோ அதுபற்றிக் கவலைப்படவில்லை. 'நான் முட்டாள்; முழு மூடன். இல்லையென்று சொல்லவில்லை. என்றாலும் என் கேள்விக்குப் பதில் தேவை' என்று வாதிட்டான்

எல்லோரும் புலவனின் முகத்தையே உற்று நோக்கியபடி இருந்தனர். புலவன் வினாவிற்கு விடை கூற முடியாமல் இருக்கிறான் என்ற எண்ணத்தோடு அல்ல —

அழகாக, அதேபோது அடிமுட்டாளின் மண்டையில் அடித்துப் பதில் சொல்லப்போகிறார் பாருங்கள் என்ற எண்ணத்தோடு

புலவனோ அமைதியாகவே இருந்தான். அடிமுட்டாள் என்று கூறப்பட்டவனோ, 'கேளும் புலவரே! மற்றொரு முறையும் கூறுகிறேன். கேளும். உலகத்திற்கு அச்சாணி எது?' என்றான் நெஞ்சம் நிமிர்ந்து. புலவன் நகைத்தான்...மக்களிடையே மகத்தான ஆரவாரம் எழுந்தது. புலவன் பேச ஆரம்பித்தான்...அமைதி அரசோச்சியது.

'அச்சு இருந்தாலல்லவா ஆணியைப் பற்றி ஆராய...' முட்டாளின் சொல்லைக் கொண்டே முட்டாளுக்கு பதில் கூறிவிட்டார். இவரல்லவா விவேகி என்றனர் மக்கள். மீண்டும் ஆரவாரம்...'அச்சைக் காட்டிவிட்டால்!'-அடிமுட்டாளெனப்பட்டவன் கேட்டான். 'காட்டு பார்ப்போம்' - புலவன் கேட்கவில்லை. குழுமிக் கிடந்த கூட்டம் கேட்டது. 'இதோ...'அவனின் தோளிலே தொங்கிக்கொண்டு இருந்த ஏரைக்காட்டினான். எல்லோரும் ஏளனம் செய்தனர். ஏளனத்தூடேயே புலவனை எல்லோரும் பார்த்தனர். அவன் முகம் கருத்துக்கொண்டிருந்தது.

'இந்த ஏரிலே இருக்கிற கொளுமுனைதான் அச்சாணி. இந்த அச்சாணி இல்லை என்றால் உலகத்தேர் ஓடாது. இந்த அடிப்படை உண்மையையே நீர் அறியவில்லையே!' என்றான். கருத்துக்கொண்டிருந்த முகம் சுருங்கவும் ஆரம்பித்துவிட்டது. கூட்டமோ ''புலவரே...புலவரே!'' என்றது. அறிஞரோ மறுகணம் ஏர் பிடித்திருப்போனின் தாள் பிடித்துக்கிடந்தான்.

கூடியிருந்த கூட்டம், 'ஐயோ இதென்ன...' என்பதற்குள், தாள் பிடித்துக்கிடந்த புலவன் உழவன் தோள்படிந்தமர்ந்திருந்தான்.

உழவன் மகிழ்ச்சி மீதுர, 'இதோ நம் புலவர்' என்று தோளின்மீது வைத்திருந்தபடியே கூத்தாடினான். இனித் தடையேது? பகையேது? எல்லோரும் ஆடினர்; பாடினர்; கொண்டாடினர்.

புலவன் தன் ஆணவ அச்சு இப்படி அடியோடு ஆணி அற முறிந்துபோகும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

—கரந்தை-கணேசன்.

கலைக்கல்லூரித் தமிழ் விழா!

பேச்சுப் போட்டியில் முதற்பரிசு பெற்ற மாணவத் தோழர் கிருட்டினனிடம் விசாலாட்சி உலாவரும் வெண்பொற்கலத்தைக் கலைக்கல்லூரிக்காகப் பரிசளிக்கிறார் திரு. கருமுத்து சுந்தரம் அவர்கள்.

காரைக்குடி அழகப்பாக் கலைக் கல்லூரித் தமிழ்மன்றத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவு விழா 5-ம் தேதி திரு. கருமுத்து தி சுந்தரம் பி. காம். தலைமையில் கல்லூரி பவநகர் அரங்கில் நடைபெற்றது. செயலாளர் திரு. தாமு. சிங்கராசன் வரவேற்றுப் பேசினார் திரு. மெய்யப்பன் அறிக்கை படித்தார். திருவாளர்கள் க. ந. இராமச்சந்திரன், கு செல்லப்பன், க. கிருட்டினன், பெரி. சிவனடியான் ஆகியோர் பேசினர்.

நம் ஆசிரியர் கண்ணதாசன் சுமார் 600 ரூபாய் மதிப்புள்ள பெரிய கோப்பை ஒன்றைத் தமது அன்னை **விசாலாட்சி ஆச்சி** அவர்கள் நினைவுப் பரிசாக தமிழில் பேசுவதில் முதற் பரிசுபெற்ற கல்லூரிக்கு கொடுக்கும்படி நன்கொடையாக வழங்கி இருந்தார். அவ்விதம் இவ்வாண்டு முதற்பரிசு பெற்ற காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரிக்கு மேற்கண்ட கோப்பையைத் தலைவர் திரு. தி. சுந்தரம் வழங்கினார். அதைக் கலைக்கல்லூரியில் முதற்பரிசு பெற்ற திரு. க. கிருட்டினன், கல்லூரியின் சார்பாகப் பெற்றுக்கொண்டார். மற்றும் பேச்சுகளில் வெற்றிபெற்ற பலருக்குத் தலைவர் பரிசுகளை வழங்கினார். கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் திரு. வ. சுப. மாணிக்கனாருக்குப் பலர் பாராட்டுரைகள் வழங்கினர். கருமுத்து திரு. தி. சுந்தரம் பேசியதாவது:

''இன்று மறுமலர்ச்சிக் காலம். இன்றுள்ள தமிழ்ப்பற்றை மேலும் வளர்க்க வேண்டும். இன்றும் நம்மவர்கள் இருவர் சந்தித்தால் வேற்று மொழியிலேயேபேசிக்கொள்கிறோம். ஆனால், வடநாட்டிலோ மேனாட்டிலோ அவ்விதம் காணமுடியாது. நமது மொழி தொன்மையானது மட்டுமல்ல; நன்மையானதுமாகும். இன்று உலகிலுள்ள நல்லறிஞர்கள் எல்லாம் நமது மொழியின் சிறப்பைக் கண்டு போற்றிப்படித்துப் பாராட்டத் தலைப்பட்டுள்ளனர்.

தமிழ்மக்கள் ஐந்திணை ஒழுக்கப்படி வாழ்ந்தவர்கள். அந்தச் சிறப்புத் தமிழ்நாட்டுக்குத்தான் உண்டு. பின்னால் பிறநாட்டினரும் சமயங்களும் ஏற்பட்டன. ஆனால் விடுதலை பெற்றபின் தமிழ்மொழி வளர்க்கப்பட்டு வருகிறது.

பிற மொழியிலிருந்து ஒரு சொல்லை எடுத்துக்கொள்ள வேண்டுமானால் தன் மொழியின் தொனி கெடாமல் எடுத்துக்கொள்ளலாம். அந்தந்த மொழிக்கு இயல்பான தொனியிலேயே பேசவேண்டும். அதை மொழி வெறி என்று கூறக்கூடாது தமிழ் தனித்தியங்கும் தன்மையதாகும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

மாணவர்கள் அரசியல் ஞானமும் ஒழுக்கமும் பெற முயலவேண்டும். நமது தேசியப் பண்பை இழந்துவிடக் கூடாது.

கவிஞர் கண்ணதாசன் நல்ல தமிழ்த்தொண்டர். முத்தமிழிலும்அவர் விற்பன்னர். அவர் அத்துடன் தமிழ்ப் பேச்சு வளர இந்தப் பரிசையும் தந்துள்ளது, சிறப்பைத் தருவதாகும். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் தமிழுக்காகக் குரல் எழுப்புவதால் தான், வேற்றார் ஓரளவாவது தமிழர்களை மதிக்கிறார்கள்.''

திருவாளர்கள் வி. சிதம்பரநாதன், இரா. காளிமுத்து ஆகியோர் நன்றி கூறினர்.

''என் தாய்'' பகுதிக்கு வைக்கப்பட்டிருந்த முடிவு தேதி கடந்தும், பல தோழர்கள் எழுதியனுப்பிக் கொண்டேயிருக்கின்றனர். தோழர்கள் இனியும் அனுப்பி வைக்க வேண்டாம், ''என் தாய்'' பகுதிக்குரிய கட்டுரை, கவிதைகளை.

என் தாய்

(9)

அச்சமும் அமைவும் ஆர்ந்திடும் இரவு. ஆந்தையொன் றலறிட எங்கோ
எச்சிலைக் கனவில் எண்ணிய நாயும் ஏக்கமோ டழுதிடக் கூரை
உச்சியி லிருந்து பூனைக ளிரண்டு ஒன்றொடு ஒன்றவை சீற
இச்சம யத்திற் சோர்வெலாம் நீங்கி ஆவலால் கண்மலர்ந் தேன்நான்.

இவ்வித இரவின் இருளினைச் சிறிது அகற்றிட விளக்குநா னிருந்த
அவ்வறைக் குள்ளே ஒளிசெயக் கண்டேன். அதன்பிற கென்னடிப் புறத்தில்
கவ்விய துயரும் காய்ந்தகண் ணீரும் கவலையும் பட்டினிச் சோர்வும்
செவ்வையின் நீங்கிச் சிக்கிய குழலும் சேர்ந்தொரு தவஞ்செயக் கண்டேன்.

கண்களும் குழிந்து கன்னமும் மெலிந்து கவினெலாம் முகத்தினில் குறைந்து
உண்ணுதல் மறந்து உறக்கமுந் துறந்து உள்ளமுந் துன்பினில் நிறைந்து
திண்ணமாய் என்னைக் காத்திட எண்ணித் தன்னல மொழித்தயென் தாயின்
பண்பினைக் கண்டேன்; பிறகவள் தாவிப் பாய்ந்தெனைத் தழுவுதல் கண்டேன்.

எனக்கென அன்னை துரும்பென இளைத்து எழிலெலாம் இழந்தனள் அந்தோ!
தனதருஞ் சுகத்தைத் திரணமாய் எண்ணித் "தனயனுக் குயிரினைக் கொடுத்தாய்
மனசினில் இருக்குந் தெய்வமே! என்போல் மற்றவர்க் கிவ்விதக் கொடுமை
கனவிலும் வேண்டாம்" என்றுரு குந்தாய்க் கண்களில் ஒளியினைக் கண்டேன்.

"பையனே! என்னைப் பாரடா; கொஞ்சம் பேசடா" என்றவள் பதறி
மெய்யினை வருட, முத்துகள் மிடைய மேனியில் பதிந்தன போல
எய்திய பெரிய அம்மையென் நினைவைப் பறித்ததைப் பையவே உணர்ந்தேன்.
பெய்திடும் பெருமழைப் புயலிடைப் புறவு பிழைத்தது போலநான் ஆனேன்.

ஒருவிளக் கிரண்டு ஒண்சுடர் பெற்று ஒளிர்ந்ததில் ஒருசுடர் அவிய
மறுசுடர் காற்றில் மலைதல்போல் இரட்டை மக்களில் மிஞ்சிய நானும்
உறுபெரும் அம்மை நோயினால் வாட உளம்மிக நொந்தனள் என்தாய்.
'இருப்பதோ ஒருகண்; இதற்குமோ கேடே உற்றது" எனமனம் நைவாள்.

சீழினால் நாற சதையெலாம் பிய்ந்து சேர்ந்திடுந் துணியெலாங் கறையாய்ப்
பாழுற எங்கும் பரவிடும் வலியால் பதறிடத் தொண்டையும் வரள
பிழையுற் றுலும் பரிவுடன் தூக்கிப் பயப்படா திருந்திடச் சொல்லி
வாழ்மையின் இலையில் வளர்த்தனள்;மற்றும் விசிறினள் வேம்பிளந் தழையால்.

என்விழி உறங்கத் தன்விழி கிறங்கி எனக்குமுன் எழுந்துநோய்ச் சூரையின்
வன்னெடும் வாயில் இருந்தெனை மீட்டு வாழ்வினை அளித்தமா மருந்து:
தன்னலக் காரிருள் துரத்தியே தியாகத் தண்ணொளி பரப்பிடுஞ் சுடராம்
அன்னையே எனது ஆருயிர்த் தென்றல் அரும்பொருள் அனைத்துமே ஆவாள்.

—க. பொழிலன்.

(10)

காப்பு

என்னைப் பெற்றவளே! எவ்வுயிரும் காப்பவளே!
தன்னலமே அறியாத் தாய்ச்சுடரே—உன் நினைவில்
ஊறும் ஆசையினை ஒன்றேனும் குறையாது
கூறும் வகையெனக்கு அருள்.

நூல்

உள்ளத் தடங்கா உறுதுயரைக் கூற
ஓடிவந்தேன் அன்றொருநாள் அன்னையிடம்
எள்ளளவும் பேசஎன்றால் இயலவில்லை
ஏக்கமெலாம் விம்மலென எதிரொலிக்க
அள்ளிய கரமென்னை அணைத்திடவும்
அவள்மடியி லென்னேரம் அயர்ந்தேனோ?
துள்ளிவிழும் கண்ணீரின் துளியோர்முத்து
துயிலெழுப்பித் துடிப்படையச் செய்ததென்னை.

கரைகட்டி நிற்கும் கண்ணிரண்டை
கண்டிடவு மென்னெஞ்சம் குமுறிற்று
மறைத்திட்டாள் மனக்குழப்ப மென்னகையில்
"மகனுனக்கு நானில்லை ?" என்றாளென் தாய்
உரைப்பதற் கொவ்வொன்றுய் வார்த்தையில்லை
உணர்ந்திட்ட என்னுள்ளத் துணர்வையெல்லாம்
பிறப்பெதிலும் எனைப்பிரியா திருந்திடவும்
பெற்றுமெனைக் காத்திடவும் வேண்டிக்கொண்டேன்.

எல்லையிலா அன்பிற்கென் தாயுவமை
என்றுமவள் புகழ்கூற லென்பெருமை
சொல்லினிலே சுவையூறும் பொருளெல்லாம்
செங்கன்னற் சாற்றுத் தேன்கலவை
நல்லவையே நினைந்து நீணிலத்தில்
நான்வாழ வேவாழும் நல்லுயிர்க்கு
இல்லையெனும் சொற்ககத்து இடமில்லை
(அங்)கிருப்பதெலாம் என்வாழ்வி னேற்றமொன்றே!

தென்னகத்துத் தெய்வம் பலவுண்டு
தெளிவதற் கொருவழியும் தெரிந்திலை!
என்னகத்துத் தெய்வமென் தாயொன்றே
எவ்வுயிர்க்கும் இவ்வுலகில் வேறில்லை
தன்னிகர்க்குத் தாரணியில் தாய்மையினில்
தானொருவ ளேயெனினும் தவறில்லை
சென்னிபடிந்து சீரடி தொழுதற்றுச்
செய்யும் வணக்கமெதும் சிறப்பில்லை.

—"கண்மணி".

—6 ம் பக்கத் தொடர்ச்சி—

"துட்டகமுனு தன்னுட்சியைத் தொடங்கிப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. வெறிபிடித்துத் திரிந்த அவன்கூட நன்னிலை நாடுகிறான். நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென்று கருதி மக்களை எல்லாம் ஒரு வழிப்படுத்துகிறான். தன் பெயர் நிலை நிற்கும்படி ஏதேனும் கலைத் தொண்டு செய்ய முனைகிறான் ஆனால் என் அண்ணன்மட்டும் ஏன் இப்படி வெறிபிடித்தலைகிறான்? எங்கள் புத்தர் இந்தக் கொடுமையைப் போதிக்கவில்லையே!' என்றாள் சோமாவதி.

புருவுக்குத் தீனியை ஊட்டிக் கொண்டிருந்த மாறநம்பி சொன்னான்: "எல்லாம் இளமைத் துடிப்பு! எத்தனை நாளைக்கு இப்படித் திரிவான் என்றுதான் பார்ப்போமே! தமிழர்களென்றால் காரி உமிழ்ந்து சீறி எழுந்தான் துட்டகமுனு. அவனே. இப்போது அடங்கிவிட்டான்!"

'நாள்தோறும் புரு கொண்டு வரும் செய்திகளைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்!" என்றான் குமரன்.

நாட்கள் நடந்தன. வானத்தில் கதிரவன் வந்து வந்து போய்க் கொண்டிருந்தான். இவர்கள் வாழ்க்கை இனிக்கும் செய்திமட்டும் வரவில்லை. "குத்து! வெட்டு!" என்று திரிந்த சிங்களவர்கள் ஆர்ப்பாட்டங்கள் அடங்கிவிட்டன. ஏனென்றால், அவர்களால் குத்திக் கொல்லப்படுவதற்கு தமிழன் எவனும் அவர்கள் மண்ணுக்குள்ளே இல்லை! ஆனால் தொலைந்து போன இளவரசியைக் கண்டு பிடிப்பதில் மட்டும் அவர்களின் கழுகு விழி ஓயவில்லை. யாராகிலும் ஒருத்திபோனால் போதும். பின்னேயே, ஓடிப்போய்ப் பார்ப்பார்கள். பின் ஏமாற்றத்துடன் திரும்புவார்கள்.

அரசிளங்குமாரி தொலைந்து போன செய்தியை அமரசேனே வெளியார் யாருக்கும் தெரியாமல் காத்துவந்தான். அவன் ஆடிவந்த அரசியல் சூதாட்டத்தில், அந்தச்சேதியை மறைத்து வைக்கவேண்டியது கட்டாயக்கடமையாயிற்று. இளவரசி ஓடிப்போன ஏமாற்றம் எத்தனை நாளைக்கு வெளிப்படாமல் இருக்கிறதோ, அத்தனைக் கத்தனை அவனுக்கு நலன், அதைப் பொறுத்தே அவனது எதிர்காலத்தின் ஒளி இருக்கிறது. மகளை இழந்த சோகத்தில் ஆற்றாது அமலசிங்கே பௌத்த ஆலயத்திற்கு ஓடிவந்தான். அரசன் ஓடிவந்ததேன் என மக்கள் அறிந்துகொண்டால், பின் அனைத்தும் அனுராதபுரத்திற்கே எட்டிவிடும். அப்படி எட்டினால் சேனேயின் கனவுகள் அத்தனையும் தரைமட்டமாகிவிடும். தான் எவ்வளவு சொல்லியிருந்தும் தந்தை இப்படி நடுத்தெருவில் ஓடி வந்துவிட்டாரே என்ற சினம், சேனேக்கு. அதனால்தான் கோவிலுக்கு ஓடி வந்தான். "இது வரை வாய் புலம்பி எதையும் சொல்லிவிடவில்லை! என்றாலும், அவன் இனி மேல் ஏன் சொல்லிவிடக்கூடாது? கிழட்டு இதயத்தால் எதையும் பூட்டி வைத்துக்கொள்ள முடியவில்லை!" என்றெண்ணி, அமலசிங்கேயைக் கொன்றுவிடத்தான் வாளை உருவிக் கொண்டு கிளம்பினான் அமரசேனே. அங்கேயே அந்தக் கிழட்டு இதயத்தைப் பிய்த்துவிட்டால் அத்தோடு தீர்ந்துவிடுமல்லவா அந்தச் செய்தி வெளியாகுமென்ற அச்சம்? அவன் அடி எடுத்து வைத்தான். மதகளிறு நடப்பதுபோல் நிலம் அதிர்ந்தது. ஆனால் தந்தையை மகன் நெருங்குவதற்குள், தந்தை மயங்கி விழுந்தான். அரண்மனை ஊழியர்கள் மயங்கிவிட்ட அவனைத் தூக்கினர்.

"பல பேர் இருக்குமிடத்தில் கொன்றால் உள்நாட்டுக் கலகம் எழுந்தாலும் எழலாம். இப்படியே அரண்மனைக்குக் கொண்டு போய்...?" என்று நினைத்துத் தூக்கிவரச்சொன்னான் அரண்மனைக்கு. அக்குழுவினர் அரண்மனையை நெருங்குவதற்குள்ளேயே, சிலர் தலைமைப் பிட்சுவை நோக்கி ஓடினர்; வேறுசிலர் சந்தனக்கட்டைகள் விற்குமிடத்திற்கு ஓடினர்; இன்னும்சிலர் வாய்க்குள் அழுதுகொண்டு அமலசிங்கேயின் முகத்தை மூடினர். கல் நெஞ்சன் அமரசேனேகூட, தன்தலையில் அடித்துக் கொண்டான்.

★

"ஐயோ அப்பா!" என்றலறி மயங்கி விழுந்தாள் சோமாவதி.

அவள் இதழ்கள் எதையும் உதிர்க்கவில்லை. விழிகள் மட்டும் இருசொட்டுக் கண்ணீரை உதிர்த்தன. அவள் கையிலிருந்த மடல் கீழே விழுந்தது. அது, மாறநம்பி புருவின் மூலம் அனுப்பியது. மேற்கொண்டுள்ள செய்தியை படிக்கவும் முடியவில்லை அவளால். காலம் ஓடியது, கண்ணீரோடு போட்டி போட்டுக்கொண்டு.

★

மாற நம்பி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி மறுநாள் வந்து சேர்ந்தான். பத்துத் திங்கள் ஓடிய வேகமே தெரியவில்லை. அதேவேகத்தில் அவர்கள் இப்போது ஓடவேண்டியிருக்கிறது. அந்தச்செய்தியைத்தான் அவன் இப்போது சொல்லவந்திருக்கிறான். ஆனால் வரும்போது இந்தச் செய்தியைச்சொல்வதற்கென்று அவன் வரவில்லை.

புரு சுமந்துவந்த மடல்மூலம் சோமாவதி இன்னும் ஓரிரு திங்களில் ஒரு குழந்தையைச் சுமக்கப் போவதை அறிந்தான். அதற்கான உதவிகளைச் செய்வதற்கென்றுதான் அவன் வந்தான். ஆனால் மாவெலி கங்கைக் கரையை வந்தடைந்ததும் அவன் நடையைத் தாமதப்படுத்தினான். சற்றே நின்று கொஞ்சத் தொலைவில் அலைந்து கொண்டிருப்பவனைக் கவனித்தான். யாரோ ஒரு சிங்களவன்தான் அலைந்து கொண்டிருந்தான். "ஒரு வேளை இளவரசி இருக்குமிடம் தேடி அலைகிறானோ, இவன்?" என்றெண்ணிய நம்பி, எதற்குமஞ்சாது கரையை யொட்டியே நடந்தான். அவன் சிங்களவன் அருகில் வந்ததும் அவனிடம் சிங்களவன் கேட்டான்: "ஏ! இந்த ஒற்றையடிப்பாதை எங்கே போகிறது தெரியுமா?"

வந்தது ஆபத்து என்றறிந்தான் நம்பி. அச்சிங்களவன் வேவுப் படையைச் சார்ந்தவன் என்பது ஏற்கனவே அவனுக்குத் தெரியும்!

"அடுத்த காடு வரைக்கும் போகும்! ஆமாம், என்ன சேதி?" எனச் சிங்களத்தில் கேட்டான், வேவு படைக்குரிய சிங்களச் சொற்கள் சிலவற்றை இணைத்துப் பேசி.

"ஓ! நீயும் வேவுப்படைதானா? உன்னிடம் சொன்னால் என்ன தப்பு? தொலைந்து போன இளவரசியை இன்னும் நான்கு நாட்களுக்குள் கண்டு பிடித்து அரண்மனையில் சேர்க்க வேண்டும். இல்லாவிட்டால் புதிய மன்னரின் மானம் தங்காது. அனுராதபுரத்துக் குணதிலகே வருவதை முதலில் அமலசிங்கே இறந்ததைக் காட்டி நிறுத்தி வைத்தார் அமரசேனே. இரண்டாம் தடவை வரமுனைந்தபோது தன் தாயார் இறந்ததைக் காட்டி நிறுத்திவைத்தார். இப்போது குணதிலகே கட்டாயம் வரப்போகிறார். தடை செய்து நிறுத்த வழி ஏதும் இல்லை! அதனால்தான் வேவு படைக்குக் கடுமையான கட்டளை இட்டிருக்கிறார் புதிய மன்னர், இளவரசியை எப்படியும் நான்கு நாட்களுக்குள் கொண்டு வரும்படி. என்தாலி அறுந்துவிடும்போலிருக்கிறது!" என்றான் சிங்களவன்.

"உன் தாலி அறுகிறதோ, என்னவோ? கட்டாயம் உன் மனைவியின் தாலி அறும்!" என்று தமிழிற் சொன்ன மாறநம்பி கண்மூடிக் கண் திறப்பதற்குள், அவனைக் குத்தினான். எதிர்பாராத தாக்குதலுக்கு அவன் இரையானான்.

கத்தியைக் கழுவிவிட்டுக் கரையேறினான் நம்பி. "தமது காட்டு வீட்டிலிருந்து அவர்கள் கிளம்பி ஆற்றங்கரைக்கு வந்து போவதால் உண்டான ஒற்றையடிப் பாதையே அவர்களைக் காட்டிக் கொடுக்க இருந்ததே! சற்றுப் பிந்தி வந்திருந்தால்?" என்று சிந்தித்தவாறே, குமரனின் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தான். "உடனே கிளம்புங்கள்!" என்றான் அவன்.

"ஏன்?"

சோமாவதியும் குமரனும் ஒரே குரலில் கேட்டனர்.

—தொடரும்—

ஓவியர் தேவை.

ஏடுகளில் பணியாற்றி அனுபவமுள்ள ஓவியர் ஒருவர் தேவை. விருப்பமுள்ளோர் நேரில் விண்ணப்பிக்கவும்.

பொறுப்பாளர்,
"தென்றல்".

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

எனக்கும் நிதியமைச்சருக்கும் பொதுவான நண்பர் ஒருவர் நிதியமைச்சருடன் பேசினார், செப்டம்பரின் தொடக்கத்தில். நிதியமைச்சர் தமது அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுற்றுப்பயணம் முடிந்து வந்ததும் என்னோடு தொடர்பு கொள்வதாக உறுதியளித்துள்ளார் என்றும் அந் நண்பர் சொன்னார். நிதியமைச்சர் நவம்பரில் திரும்பினார். ஆனால் அவரிடமிருந்து இது நாள் வரை ஏதும் அறியவில்லை நான்.

அந்த அமைச்சர் நான் பொறுமையிழந்துவிட்டதாகவும், நாடு முழுதும் இதைப் பறை சாற்றுவதாகவும் சொல்லியதை நான் அறிகிறேன். ஆனால் இது உண்மையில்லை!

நான் இன்னும் உறுதியளிக்கப்பட்ட பதிலுக்குக் காத்திருக்கிறேன். அவர் குறிப்பிட்ட தனிப்பட்ட வழக்குகள்பற்றி ஆய்வது என்னைப் பொறுத்துச் சரியில்லை, இந்த நிலையில்.

இங்கே எழுந்துள்ள கேள்வி தனிப்பட்ட சிலரைப் பற்றியகேள்வியில்லை; ஆனால் பொது நிதியைக் கையாளும் வகை பற்றியது, அக் கேள்வி.

என்னுடைய குற்றச்சாட்டுக்களும் அதற்கு எல். ஐ.சி.யினர் அளித்த பதில் விவரங்களும், எல். ஐ சி.யின் பணிகளில் தொடர்பு கொண்ட பொதுமக்களுக்குத் தெரியும்படிச் செய்ய வேண்டும் என்று நான் கோருவது அதிகப்படியானதில்லை.

ஏ. சுப்பையா,
8-3-1960."

சுப்பையா அவர்களின் மடலையும், பாராளும் மன்றத்தின் இந்தக் கூட்டத்தில் நடந்த எல். ஐ. சி. பற்றிய விவாதங்களையும் கூட்டிக் கழித்துச் சிந்தியுங்கள்!

நேரு பெருமானின் திருவுருவம் தெரிகிறது!

அவரின் கீழ் இயங்கி வந்த எல்.ஐ.சி. முதலீட்டுக் குழுவில் அங்கம் வகித்து விலகி விட்ட பாராளு மன்ற உறுப்பினர் சுப்பையாவின் உருவம் தெரிகிறது!

குற்றக் கணைகளைத் தொடுக்கின்ற உறுப்பினர்களின் முகங்கள் தெரிகின்றன!

ஊழலால் தம் தொப்பையை வளர்த்துக் கொண்ட "பத்திரிகா தர்மச் சிங்கங்"களின் விழிகள் பிதுங்குவதும் தெரிகிறது!

"இப்போது எல். ஐ. சி.யில் மிக முக்கியமான ஒரு சேதிதான சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பிடத்தக்க குற்றங்கள் இன்னும் பல இருக்கின்றன" என்று "தி ஸ்டேட்ஸ்மேன்" என்ற ஏடு குறிப்பிட்ட குற்றங்களும் தெரியத்தான் செய்கின்றன!

இன்று எல். ஐ. சி. பணத்தைக் கடனாகத் தந்து "கல்கி"யைக் கல்யாணம் செய்து கொள்ள முனைந்து ஏமாந்த அரசினரின் முகமும் தெரிகிறது!

ஆமாம்! இதுதான் ஆனந்த சுதந்திரம் அனைவர்க்கும் தருகின்ற காட்சி என்பதும் தெரிகின்றது!

ஏழையரே! ஏமாந்தோரே! இதைக் கண்டு சுவையுங்கள்! எல். ஐ. சி. என்னும் படுகுழியில் கொண்டு கொட்டுங்கள்! கொட்டுங்கள்! இன்னும் கொண்டுபோய்க் கொட்டுங்கள்!

—செல்லையா.



பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்.

எம். எஸ். மாணிக்கம், பம்பாய்.

1. மொஹெஞ்சோதாரோ, ஹரப்பா நாகரீகம் திராவிடர் (தமிழர்) நாகரீகம் எனச் சொல்லப்படுகிறதே, அங்ஙனம் இந்தியா முழுமையும் சிறப்போடு வாழ்ந்த தமிழன் மதுரையினின்று தென்திசையிலேயே தலை, இடை, கடை என முச்சங்கங்களையும் ஏற்படுத்தியதற்குக் காரணம் யாது?

ஈழம் திராவிடத்தின் ஒரு பகுதியா?

ஈழம் தனி நாடாயின் ஈழத்தின் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்தில் தமிழ் சிறப்புற்றிருக்கக் காரணம் யாது?

தமிழர் தென் திசையில் தலை இடை கடைச் சங்கம் ஏற்படுத்திய காலம் திட்டப்படாத நிலையில் கேட்கப்படும் கேள்வி இது. மொகெஞ்சதரோ ஹரப்பா நாகரிகம் ஐயாயிர ஆண்டுகட்கு முற்பட்டது. தலை இடைச் சங்கங்கள் இவற்றுக்கும் முற்பட்ட காலத்தவை.

தெற்கிருந்து வடக்கே நாகரிகம் பரப்பியவர் தமிழர்.

இதற்கு சான்று உண்டு.

(1) மொகெஞ்சதரோ நாகரிகச் சான்றுகள் சிந்து கங்கை வெளி முழுதும் காணப்பட்டு வருகின்றன. தென்னகத்திலும், இலங்கையிலும் அது சார்ந்த தொடர்புகள் தென்படுகின்றன. ஆனால் அதே சமயத்தில் வடதிசையிலும் முற்பட்டுத் தென்னகத்திலேயே மனித உலகில் முதல் முதல் **இரும்பு** பயன்படுத்திய தடம் காணப்படுகிறது. மொகெஞ்சதரோ புதிய கல்லும் செம்பும் பயன்படுத்திய காலத்திலேயே தெற்கு இரும்பு நாகரிகத்தில் முன்னேறியிருந்தது.

(2) மொகெஞ்சதரோ நாகரிகம் மேலை ஆசியச் சுமேரிய ஈழ நாகரிகங்களுடனும் எகிப்திய நாகரிகத்துடனும் தொடர்புடையது. ஆனால் அது அவற்றுக்கும் முந்தியது, முற்பட்டது. நாகரிக வளர்ச்சியின் திசை வடக்கிருந்து தெற்கோ, மேற்கிருந்து கிழக்கோ அல்ல, என்றும் கிழக்கிருந்து மேற்கு, தெற்கிருந்து வடக்கு என்பதை இது காட்டுகிறது.

(3) வடநாட்டில் இன்று பல பழம் பொருளடுக்குகளில் மொகஞ்சதரோ கால முதல் அவுரங்கசீப் காலம் வரையுள்ள நாகரிகப் படிகளின் சின்னங்கள் அடுக்கடுக்காகக் காணப்படுகின்றன. இவற்றில் ஆரிய (இருக்கு வேத) நாகரிகம் மொகெஞ்சதரோவுக்கும் புத்தர் காலத்துக்கும் இடைப்பட்ட (கி. மு. 2500-க்கும் கி. மு. 500-க்கும் இடைப்பட்ட அதாவது கி. மு 1000-க்குரிய) நாகரிகமாகவே தான் காணப்படுகிறது.

இன்று கடைச் சங்க ஏடுகளையும் சிலம்பு மேகலைகளையும் வைத்துத்தான் தமிழர் பெருமைப்படுகின்றனர்-உலகம் அவற்றின் பெருமைகளை மெல்லக் காணத் தொடங்கியுள்ளது. ஆனால் தலை இடைச் சங்க ஏடுகள் அவைகளை மின்மினியாக்கிவிடத் தக்கவையாக இருக்கும் என்று கடைச் சங்க ஆராய்ச்சி மூலமே நாம் துணிந்து கூற முடியும்.

இடைச் சங்க, தலைச் சங்கத் தலை நகர்கள் ஈழத்திலோ ஈழம் கடந்து தென் திசையிலோ தான் இருந்திருக்க வேண்டும்.

சிங்களவரையும் மலையாளிகளையும் எளிதில் இன்னும் அடலார் வேறு பிரித்தறியமுடியாது. தோற்றம், மொழித் தொனி, பழக்க வழக்கம், ஒழுக்க முறைமை, கலைப் பண்பு ஆகியவற்றில் அவர்களிடையேயும், பர்மியர், மலாய் மக்கள், கிழக்கிந்தியத் தீவினர், தென் சீனர், சப்பானியர் ஆகியவரிடையேயும் ஒப்புமை மிகுதி. கடல்கடந்த பண்டைத் தமிழகத்தில் வட கோடியிலிருந்து வந்தவர்கள் தமிழர். பிற கோடிகளிலிருந்து நாற்புறமும் சிதறித் தப்பிச் சென்றவர்கள் மற்றத் தென் கிழக்காசிய இனத்தார்.

தவிர, தென்னகத்திலிருந்து இலங்கை பிரிந்தது இராமாயண காலத்திலிருந்துதான். **பண்டை இலங்கை தென்னகத்தின் ஒரு பகுதிமட்டுமல்ல, மையப்பகுதி.**

யாழ்ப்பாணம் தமிழில் சிறப்புற்றிருக்கக் காரணம் இரண்டு. ஒன்று அது தலைச் சங்க இடைச் சங்கத் தலை நகர்களுக்கு அருகாமையிலிருந்த இடம். மற்றொன்று ஆரிய ஆதிக்கம் தமிழகத்தில் வடக்கிலிருந்து தெற்கே அவ்வளவு தொலை சென்றுவிடவில்லை. இன்று கூடச் சிங்களவரை மயக்கி ஆட்கொண்டே அது, தமிழர் மீது அவர்களை ஏவிவிட மொழி கலை இலக்கிய சமயப் பெயர்களால் முயன்று வருகிறது.

நடுநிலக் கடலக இனம் முதல் இரண்டிலும் தமிழ்த் தொடர்பின்றி இன்றும் பிற்பட்டுள்ளது. மூன்றும் வகையிலோ அது எண்மானத்தை இந்தியாவினின்றே பெற்றது. மூன்றுவதன் மூலமும் தமிழினமே என்பதை இது சுட்டிக்காட்டும்.

★

அ. சுந்தரேசன்,
மேட்டுப்பாளையம்

1. தமிழினப் பற்றை வலியுறுத்தும் கொள்கை குறளில் உண்டா? எடுத்துக் காட்டு:-

"மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்"

—என வள்ளுவரே கூறியிருக்க-தற்போது உள்ள வள்ளுவர் படங்களில் சடையும் தாடியும் காட்சியளிப்பதேன்?

தமிழினம் மக்களிடை இவ்வேறுபாட்டடிப்படையில் பண்பு வகுக்கவில்லை. மனித இனத்துக்கென்று அது வகுத்த பண்பையே நாம் தமிழர் மரபினராதலால் தமிழ்ப் பண்பு என்கிறோம். தமிழ்ப் பண்பை நாம் மேற்கொள்வதற்குக் காரணம் அது தமிழர் பண்பு என்பதன்று, சிறந்த பண்பு என்பதே. அதைப் பின்பற்றுபவர் தமிழரல்லாவிட்டாலும் அவர்களை தமிழ்ப் பண்புடையவர் என்று பாராட்ட நாம் தயங்கமாட்டோம். தமிழராகப் பிறவாமல் தமிழ்ப் பண்பளாவியவர்களே உலகப் பெரியவர்கள்.

வள்ளுவர் காட்டிய சிறந்த பண்பை நாம் தமிழ்ப் பண்பென்கிறோம். சடையும் தாடியும்போன்ற புற வேடங்கள் உலகில் பண்புடைய எல்லா இனங்களாலும் எல்லாச் சமயங்களாயும் பல படிகளில் கண்டிக்க அல்லது கடியப்படுபவையே. அவற்றை வலியுறுத்தும் சில சமுதாய விரோதிகள் இக்நாளில் ஒரு இனப் பெயர், ஒரு சமயப் பெயர் போர்த்து நடமாடுகின்றனர். வள்ளுவர் அவர்களை அயலினத்தார் என்பதற்காகக் கண்டிக்கவில்லை. சிறப்பற்ற, தீய பண்பென்றே கண்டித்தார். தமிழருக்குப்புதிதான ஓர் இனப் பெயர் அல்லது சமயப் பெயர் கூறி அதை மேற்கொள்பவர்களை இன்று நாம் நம் தமிழ் நய நாகரிகப் பண்பு காரணமாகத் தீயவர் என்னுமல் அயலினத்தவர், அயலினப் பண்புடையவர் என்று மெல்ல ஒதுக்க விரும்புகிறோம்.

2. "வடமொழி அக்ஷரமாலையை அடிப்படையாகக் கொண்டே தமிழ் நெடுங்கணக்கு முறைப் படுத்தப்பட்டது" என்றும்

"குறிலுக்கு ஒரு மாத்திரை என்பதும், நெடிலுக்கு இரு மாத்திரைகள் என்பதும், மெய்க்கு அரை மாத்திரை என்பதும் ஆகிய இக்கணக்கு வடமொழியினின்றும் கொள்ளப்பட்டது"—என்றும் ஒரு தமிழ் ஆராய்ச்சியாளர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். தங்கள் கருத்து என்ன?

தொல்காப்பியர் காலத்தில் ஆரியர் இந்தியாவுக்குள் வரவேயில்லை என்பதை வருங்கால ஆராய்ச்சிகள் மெய்ப்பித்துவிடுவது உறுதி. இத்தகைய ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சிகளுக்கு அப்போது இடமே இராது.

குறில் நெடில், உயிர், மெய் ஆகிய வேற்றுமைகளறிந்து அவற்றின் பிறப்பிடமறிந்து அதனடிப்படையில் நெடுங் கணக்கு முறை வகுத்த மொழிகளை **இந்தியாவுக்குள்ளே மட்டும்தான்** காணலாம். இந்தியாவுக்கு வெளியே ஆரிய இன மொழிகள் நூற்றுக்கணக்காக உண்டு. அவற்றிலும் இன்றுவரை கிடையாது. ஆரியமல்லாத பிற இன மொழிகளும் நூற்றுக்கணக்காக உண்டு. அவற்றிலும் இன்றுவரை கிடையாது **இந்தியாவுக்கு மட்டுமே உரிய இந்தச் சொத்து, இந்தியாவுக்குமட்டுமே உரிய திராவிட இனத்தினுடையது என்பது கூறாமலே விளங்கும்.**

ஆரிய மொழிகளில் இந்தியாவுக்குள்ளே கூடச் சமஸ்கிருதம் ஒன்றில் தான் தனி முதல் (Original) இலக்கணம் உண்டு. அது தமிழிலிருந்து ஒலிப் பிறப்பு, எழுத்து வரிசை, மாத்திரை ஆகியவற்றைப் பார்த்துக் கற்றுக்கொண்டது. தமிழருகே வளர்ந்த பண்டை ஆரிய நாகரிக மொழியான சமஸ்கிருதத்தின் பக்கத்தில் தனியாகத் தொலைவில் வளர்ந்த இன்றைய ஆரிய நாகரிக மொழியான ஆங்கிலத்தை வைத்துப் பார்க்க ஆங்கிலத்தில் நெடில் குறில் கிடையாது (Fit-feet குறில் நெடில் என்பதை இந்திய மொழிகள் கண்டபின்னன்றி அவர்கள் அறிந்தது கிடையாது. Par, bar என்பதன் முதல் எழுத்துக்கள் ஒரே ஒலியின் வலி, தளர்வு என்பதும் அவர்களுக்குத் தெரியாது). சமஸ்கிருதம் நாலு 'க'வையும் 'ங'வையும் நாலு 'ப'வையும் 'ம'வையும் 'க'வர்க்கம், 'ப'வர்க்கமாக வகுக்க உதவிய தமிழேதான், சமஸ்கிருதத்துக்கு குறில் நெடில் வகுக்க, மாத்திரை அமைக்கக் கற்பித்த மொழி என்பதறிக.

முகவரி மாற்றம்

"கலை நிலா" என்ற ஏடு தொடங்கும் பணிகட்காக. தோழர் இரா. மதனகோபால் பி. காம். கீழ்க்கண்ட முகவரிக்கு மாறியுள்ளார்:

4/1 சைடோசி தெரு
சென்னை-5.

செய்வாரா அமைச்சர்?

"இறுதியாக ஒன்றைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்தின் முதலீட்டுக் குழுவிலிருந்து சென்னையைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் இராசினமாச் செய்தது பற்றி மாநிலங்கள் சபையில் வெகுவாகப் பேசப்பட்டிருக்கிறது; பத்திரிகைகளிலும் அதுபற்றி ஏராளமாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால் இதுவரை அவை பற்றி நிதியமைச்சர், எந்தவித விளக்கமும் தரக் காணோம். அவரது இராசினமாவிற்கான காரணங்களையும், அவரது இராசினமாக் கடிதத்தையும் சபைமுன் வைக்குமாறு நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்; அப்போதுதான், சபை உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள முடியும்."

—தில்லி வரவு-செலவுத் திட்டத்தின்போது ஈ. வே. கி. சம்பத் எம். பி.

செழியன் உலா

கடந்த 27-2-60-ம் நாளிட்ட "தென்றல்" இதழில் தாழ்த்தப்பட்டோருக்கு உதவிசெய்வதாக அரசினர் நடத்தும் பகல் நாடகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். ஓர் ஊரில் தாழ்த்தப்பட்டோருக்குக் குடியிருப்புக் கட்டித் தருவதாகச் சொல்லி எழுப்பிய வீடுகள் மழையில் இடிந்ததையும், அதனுல் திறப்புவிழாவுக்குப் புறப்பட்ட அமைச்சர் பயணத்தை நிறுத்தியதையும் குறிப்பிட்டிருந்தேன். குறிப்பிடப்பட்டஊரான ஆவரங்காட்டூர், கவுந்தப்பாடியைச் சார்ந்துள்ளது. அங்குநடந்த அனைத்தையும் கவுந்தபாடித் தோழரும் பவானிவட்ட தி. மு. க. செயலாளருமான இரா. துரை அவர்கள் எழுதியனுப்பியுள்ளார்கள். அவர் மடல் இது:

"அன்புடைய ஆசிரியர் அவர்கட்கு,

கவுந்தப்பாடியைச் சேர்ந்தாற்போல் உள்ள ஆவரங்காட்டூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கீழ்ப்பவானி சமுதாய நலத்திட்டத்தின் கீழ்க்கோவை மாவட்டக் கலெக்டர் உயர்திரு பி. கே. நம்பியார் ஐ. ஏ. எஸ். அவர்களால் 22-12-55-ல் அடிப்படைக் கல்நாட்டப்பட்டு 46 வீடுகள் கொண்ட அரிசனக் காலனி கட்டப்பட்டது. ஷெ கட்டிடம், அதுபோது கிராம ஊழியராக இருந்த தியாகி கே. சி. தர்மலிங்கத்தின் மேற்பார்வையில் கட்டப்பட்டது. ஆனுல் தியாகி என்ற பெயருக்கு மாசு கற்பிக்கும் வகையில் ஒழுங்கிலும், செயலிலும் அவர் நடந்து கொண்டார். காலனிக் கட்டிடம் புழுதி மண்ணினுல் கட்டப்பட்டபோது மேற்படி காலனி தாழ்த்தப் பட்டவர்களும் அப்பகுதி மக்களும் தவறைச் சொல்லினர். அப்படிச் சொன்னபோது தியாகி தர்மலிங்கம் 'இது இன்சீனியர் பிளான்; இப்படித்தான் இருக்கும்'' என்று சொன்னுர். பின்பெய்த சிறுமழையினுல் காலனிச்சுவர்கள் சரிந்து விழுந்து விட்டன. எப்படியும் காலனிக்கட்டிடத் திறப்புவிழா நடத்த வேண்டுமென்ற முடிவில் மேல் கூரைகளும் போட்டனர். பின்பெய்த சிறுமழையினுல்கூரைகளும் சேர்ந்து சரிந்து விழுந்து விட்டன. இது பற்றியசெய்திகள் அவ்வப்போது 20-4-'56, 2-7-'56, 15-10-'56 தேதிகளில் அமைச்சர்களுக்கும், கலெக்டருக்கும், சமுதாய நலத்திட்டஅதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டன. பகிரங்கமாக அரிசனங்களுக்குக் காலனிக் கட்டிடத்தைக் கட்டும் பொறுப்பில் இருந்த தியாகி தர்மலிங்கம் செய்த மோசடியைக் குறித்து இதுவரைசர்கார் அவர்மீது எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை. மாருக அவருக்குப் பரிசு வழங்குகிறது. மேற்படி காலனி கட்டும்போது சில தாழ்த்தப்பட்ட பெண்கள் தன் இச்சைப்படி நடக்காததால் அவர் அடித்துத் துன்புறுத்தியுள்ளார். இது பற்றியும் அமைச்சர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கக்காணும். காலனியும் திறப்புவிழா நடைபெறவில்லை.

14-10-'56ல் பெதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஈ. வி. கே. சம்பத் ஆகியோர்களைக் கூட்டிவந்து மேற்படி காலனி இடிந்து போன வீடுகளைக் காட்டினேன்.

16- 10- 57-ல் அறிஞர் அண்ணு, ஈ. வி. கே. சம்பத் ஆகியோர்களைக் கூட்டிவந்து காண்பித்தேன்.

29- 10-' 57-ல் கோவை மாவட்ட கலெக்டர் அவர்களை நேரில் கண்டு விபரங்களைக் கூறினும்.

20- 11-' 58-ல் அய்யம்பாளையத்திற்கு வந்திருந்த கனம் சி. சுப்பரமணியத்தைக் கண்டு விண்ணப்பம் கொடுக்க ஏற்பாடு செய்தோம்.

14- 8-' 59 கனம் கக்கன் மேற்படி காலனிக்கு வந்து குறைகளைக்கேட்டுச் சென்றுர். இதுவரை யார்மீதும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

பவானித்தொகுதி எம். எல். ஏக்கள் சி. சி. குருமூர்த்தி, பி. சி. மாணிக்கம் ஆகிய இருவரையும் பலமுறை நேரில் கண்டு சொல்லியும், விண்ணப்பம் கொடுத்தும் உள்ளோம்.

பொதுமக்கள் வரிப்பணத்தில் அரிசனங்களுக்கு வீடுகட்டித் தருவதாகப் பறைசாற்றும் சர்க்கார் பகிரங்கமாக மோசடிசெய்தவர்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கக் காணும். அறிஞர் அண்ணு அவர்களும் சட்டமன்றத்தில் இதுபற்றிக் கேள்வி எழுப்பினுர். ஆனுல் அமைச்சர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. இது சம்பந்தமான அத்தாட்சிகள் அனைத்தும் உள்ளன. தங்கள் தென்றலில் இதன் விபரத்தை எழுத வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

இரா. துரை."

தோழர்களே! நீங்கள் கடிதத்தைக் கண்டு விட்டீர்கள்! அமைச்சர் கக்கன் பாழான அந்தக் குடியிருப்பையே கண்டிருக்கிறுர்! உங்கள் உள்ளத்தில் அந்த ஏழைகள் பால் இரக்கமும் ஆட்சியின்பால் சினமும் எழுகின்றன! ஆனுல் அமைச்சர்கள் எவருக்கும் அந்தமக்கள் மீது இரக்கமும், அநீதிக்காரர்கள் மீது ஆத்திரமும் எழவில்லை! அவர்கள்தான் காங்கிரசாராயிற்றே! எப்படிவரும் இரக்கமும் நேர்மையும்? நாம்தான் அந்த மக்களுக்கு எல்லாம் ஆறுதல் மொழிசொல்ல வேண்டியிருக்கிறது.

—செழியன்.

21-2-60 அன்று தேனும்பேட்டையில் நடைபெற்ற வள்ளுவர் பட வெளியீட்டு விழாவில், நிகழ்ச்சித் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதனுர், அமைச்சர் சுப்பிரமணியம், அறிஞர் அண்ணு ஆகியோர்.

—புகைப்படம்: தமிழ்நாடு புகைப்பட நிலையம், சென்னை-18.

ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

மார்ச் 23 வாலாசாபாத்.
,, 30 சென்னை 31-வது வட்டம்.
,, 31 ,, 32-வது வட்டம்.
ஏப்ரல் 12 சாலபாக்கம்.
,, 17 சென்னை 37-வது வட்டம்.
,, பொன்னராவதி.
,, மதுரை.
மே 1 திருச்சி.
,, 2 இந்திராவனம்

(வ. ஆ. மா.)

ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் திருப்புத்தூர்ப் பஞ்சாயத்துக்கு ஒரு வானெலி நிலையம் அமைத்துத் தருகிறுர்கள். அதற்குக் கால்கோள் விழா சென்னை மேயர் அப்துல் காதர் அவர்களால் 25-3-60 அன்று மாலை நடைபெறும். அன்று மாலையே மேயர் அவர்கட்குத் திருப்புத்தூர்ப் பஞ்சாயத்து வரவேற்பளிக்கப்படும்.

கீழ்க்கண்ட ஊர்களில் "தென்றல்" விற்பனையாளர்கள் தேவை.

★

குளித்தலை
வாணியம்பாடி
ஆற்காடு
சோலார்பேட்டை
தர்மபுரி
ரெட்ஹில்ஸ்
திருக்கோயிலூர்
திருமங்கலம்
திருவரம்பூர்
மூனறு
முசிரி
உத்தமபாளையம்
அதிராம்பட்டணம்
ஓலப்பாளையம்
பெருந்துறை
நரசிம்மநாயக்கன்பாளையம்
திட்டக்குடி
குருவிகுளம்
மார்த்தாண்டம்
திருப்பரங்குன்றம்

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.